# கண் கெட்ட பின்

சிவசங்கரி

திருமகள் நிலையம்.
55. வெங்கட் நாராயணா ரோடு
தி.நகர், சென்னை-600017.

முதற்பதிப்பு : டிசம்பர் 1984
இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 1993
உரிமை : ஆசிரியருக்கு

விலை : ரூ. 10-00

16980

3294801

அச்சிட்டோர் :
டி. ஜே. பிரிண்டர்ஸ்
6, காசிம் அலி முதல் தெரு, சென்னை-600 005

## முன்னுரை

இன்றையச் சமூக சூழலில், சுதந்திர உணர்வு எல்லா நிலைகளிலும் மேலோங்க காண்கிறோம். பெற்றோர்களும் தங்களைப் போலவே பிள்ளைகளும் வளரவேண்டும் என்ற அடிப்படையிலே வளர்ப்பதையும்...'மனைவிக்கு அடங்கிய கணவன் குடும்பத்தையும், பெண்கள் கட்டுப்பாடில்லாமல் வளர்வதால் உண்டாகும் இன்னல்களையும் அப்படியே நம் மனதில் வார்த்து, பாத்திரங்களை பேச வைக்கும் இந்நாவலை தமிழகத்தின் தலைச் சிறந்த சமூக நாவலாசிரியை சிவசங்கரி அவர்கள் நூலை வெளியிட இசைந்தமைக்கு எங்களது நன்றி.

அ. இராமநாதன்
பதிப்பாளர்

## சிவசங்கரியின் இதர நூல்கள்


| | | |
|---|---|---|
| தவம் | 9 | 25 |
| காற்றுள்ள போதே | 22 | 00 |
| சுறாமீன்கள் | 20 | 00 |
| வளர்த்த கடா | 30 | 00 |
| உண்மைக் கதைகள் | அச்சில் | |
| ஒரு சிங்கம் முயலாகிறது | 12 | 00 |
| தெப்பக்குளம் | அச்சில் | |
| ஆயிரம் காலத்துப் பயிர் | அச்சில் | |
| தப்புக் கணக்கு | அச்சில் | |
| சூக்கணாங்கயிறு | அச்சில் | |
| பிராயச்சித்தம் | 17 | 50 |
| நட்பு | 14 | 00 |
| ஓவர் டோன் | 18 | 00 |
| இரண்டு பேர் இந்துமதி—சிவசங்கரி | அச்சில் | |
| இன்னொரு காரணம் | அச்சில் | |
| இதுவும் தாஜ்மகால்தான் | 9 | 50 |
| கருணைக் கொலை | 32 | 00 |
| எதற்காக? | 15 | 00 |


16980
329480

# கண் கெட்ட பின்...

புருஷனின் தலையைக் கண்டதும் தனலட்சுமியின் குரல் இன்னொன்று உயர்ந்தது.

"என் புருஷன் சம்பாதிக்கிறார்; இந்தாம வாரி விடுறு அள்ளிக் கொடுக்கிறார். இவங்களுக்கு என்னன்றேன்? அல அல ஆத்தாமை புடிச்சி வெந்து சாவுறானே இது எதுக்குன்றேன்? தெரியாமத்தான் கேக்கறேன். உனக்கு இத்தனை ஆங்காரம் எதுக்கு? ம்?"—

வழக்கமாக மனைவி இப்படி பேசும்போது பதறிப் போவதைப் போலவே இப்போதும் மணவாளன் பதறிப் போனார்.

"என்ன தனம்... என்ன விஷயம்?"—

"வந்திட்டீங்களா? வாங்க... நம்ம பொண்ணுக நம்பளுக்கு உசந்தி... அதுங்களுக்கு பூவால அபிஷேகம் பண்ணுவோம், ஐயா சாமி, வசதிஇருந்தா வைரத்தாலயே இழைப்போம். இதுங்களுக்கு என்ன வந்துச்சு? எதுக்காக இந்த பொறுமல்? என்னங்க நா கேட்கறது நியாயம் தானே?"—

"நியாயமில்லாமா? நாம பெத்ததுங்க நம்மளுக்கு உசத்தியா இல்லாம தெரு பசங்களா இருப்பாங்க?"—

''உங்களுக்குத் தெரியுது. அவளுக்குத் தெரியலையே''

''என்ன நடந்திச்சு நளம்? அவ என்ன சொன்னா?''—

''இன்னும் என்னங்க நடக்கணும்... நாம நம் புள்ளைங்களோட சந்தோஷமா இருக்குறது எல்லாத் தே டியாக்களுக்கும் பத்திகிட்டு வருது... எதையாவது சொல் பழிக்கணும்னு அவ அவ அலையுறா?''

''எந்தக் கழுதை என்ன சொல்லிச்சு? அதை முதல் விவரமா சொல்லேன்''...

''ஒண்ணுமில்லீங்க... பேபி நேத்திக்கு அம்மா ஜா மல்லிப்பூ வைச்சிக்கணும்மானு சொல்லிச்சு இல்லே.''

''அதுக்குதான் காலைல தனியா பணம் கொடுத்திட்டு போனேனே...''

''கொடுத்தாங்க தான். நானும் பூச்சந்தைக்குப் போனா மல்லி நல்ல சரக்கா வாங்கலாமேனு வேகா வெயில்ல பஸ் பிடிச்சு டவுனுக்குப் போயி, ஒரு சேர் வாங் கிட்டு வரேன்; இந்த கல்யாணி இல்லே, கல்யாணி''...

''யாரு? மூணாவது வீட்டு ஆறுமுகம் சம்சாரமா?''—

''அவளேதான்...'' வயிறு முட்ட தின்னுட்டு, தின்ன சோறு ஜீரிக்காம எவனோட மல்லுக்கு நிப்பம்னு அலைய றாளே, அவளேதான்... நா பாட்டுக்கு பஸ்ஸிலேந்து இறங்கி வரேன், வாச திண்ணைல உக்காந்துகிட்டு ''எங்கக்கா வெயில்ல போயிட்டு வர்றீங்க?'னா...ஆத்தாடி, அக்கறையோடதான் கேக்குறாளாக்கும்னு நினைச்சி, நானும் வெகுளியா 'பேபி ஜாதி மல்லி வைச்சிக்கணும்னு ஆசைப்பட்டுச்சு. இங்க எங்க நல்லதா கிடைக்குது?அதான் டவுன் வரைக்கும் போயி வாங்கிட்டு வரேன்'னு சொன் னேன். கேட்டுட்டு உதட்டை பிதுக்கினா. ''விலை என்னாக்கா?'ன்னா... 'பத்து' ரூபாய்ன்னேன். 'அத்தனை பணம் கொடுத்து இப்ப பேபிக்கு பூவாங்கித் தர என்ன



முடை? மசக்கையா? வயித்துப் பிள்ளையா? நல்லா அனை பதீங்க பொண்ணு கேட்டுட்டாளு! ஆனாலும்தான் பொண்ணுக்கு ரொம்ப இடம் கொடுக்கறீங்கக்கா... நாளைக்கு ஒருத்தன் வீட்டுக்குப் போயி வாழவேண்டிய பொண்ணுக்கு இத்தனை செல்லம் நல்லதுக்கு இல்லே...! அம் மாங்களுக்கு இத்தனை செல்லம் நல்லதுக்கு இல்லே...! பயப்படணும் எனக்கு பக்குனு போச்சி...' உனக்கு என வாலாட்டம் பிள்ளை; சாண் நீளத்துக்கு பூ வைச்சிகிட்டா கூட... முடி பிஞ்சி தொங்கிடும். என் மகளுக்கு சாட்டை யாட்டம் முடி... அவ ஆசைபடறதுல தப்பு என்ன? உன் வழிய பாத்துகிட்டு போ...னு அவகிட்ட சொல்லிட்டு வந் திட்டேன். பின்னே என்னங்க? போனாப் போவுதுனு இடம் கொடுத்து கொடுத்து ரொம்பத்தான் துள்ளுதுங்க... அது என்ன பட்டி வாய்!''

மணவாளன் கோபத்துடன் மீசையை முறுக்கிக் கொண்டார்.

''இவ முன்னகூட உன்னண்ட இப்படி வம்புக்கு வந் திருக்கா இல்லே நளம்?''—

''முன்னே என்ன முன்னே... இப்பத்தாங்க இரண்டு மூணு மாசம்கூட இருக்காது. சரோஜிக்குப் பிடிக்கும்னு நீங்க செலத்துலேந்து மல்கோவா கூடையா வரவழிச்சீங்க இல்லே, அப்பத்தான் 'அம்மாடியோவ்' டஜன் முப்பத்தி யாறு ரூபா கொடுத்தாலது மல்கோவா வாங்கித் திங்க ணுமா? இப்படி காசை கரியாக்கினா, சாப்பிடறதுதான் உடம்புல ஒட்டுமா?'னு கேட்டவதானே இவ...''

''அப்பவே என்னண்ட நீ விஷயத்தைச் சொல்லி இருந்தா ஆறுமுகத்துகிட்டயே போயி, உரைக்கறாப்புல நாலு வார்த்தை கேட்டிருப்பேன்.''—

,'எங்கங்க? அந்த சமயத்துல நீங்க சரக்குபிடிக்க வெளி யூர் போயிருந்தீங்க... பத்து நாள் கழிச்சி வந்தப்ப விஷயம் ஆறின கஞ்சியாயிட்டது. அதுக்கும் மேல போயி நீங்க

கேட்டிருந்திங்கன்னா, வலுச் சண்டைக்குப் போறாப்பல இருக்கும்னுதான் வேணாம்னேன்..."

"அந்த விடு. இப்ப என்ன செய்யணும் சொல்லு... போய் ஆறுமுகத்தன்ட 'உன் பொண்டாட்டிய கொஞ்சம் அடக்கி வை'யுன்னு கண்டிக்கட்டுமா?"

தனம் தோள்பட்டையில் முகவாயை இடித்துக் கொண்டாள்.

"ஐயே... உடனேபோய் மிரட்டிடுவீங்க உங்களை எனக்குத் தெரியாதாக்கும்... இம்பப் பேச்செல்லாம் என்னண்ட தானே..."

"அட, நா தான் போய் கண்டிக்கறேன்னு சொல்றேன் இல்லே?"—

"கண்டிப்பீங்க... கண்டிப்பீங்க... போய் என்ன ஆறுமுகம் சௌக்கியமா?'னு கேப்பீங்க. உட்காருவீங்க... அவங்க காபி குடுத்தா தொட்டை விட்டுட்டு குடிப்பீங்க. ஊர்கதை எல்லாம் பேசிட்டு புறப்படறப்போ நா கேப்பே னேன்ற பயத்துல சும்மா ஒரு வார்த்தை அவரு சம்சாரத் தைப் பத்தி சொல்லுவீங்க... அதானே நீங்க மாமூலா செய் வது... இருவது வருஷமா வாழ்றேனே உங்களைப் பத்தி இது கூடவா எனக்குத் தெரியாது. ஆதில மாமியாரும், நாத்தனாரும் ஆட்டி வைக்கறப்பவே என்னண்ட குதி குதினு குதிச்சிட்டு, அங்க போய் அம்மா, அக்கானு அசடு வழிஞ்சிட்டு வந்ததெல்லாம் இன்னும் நினைப்பு இருக் குங்க...!

எங்கேயோ தொடங்கி தனலட்சுமி எங்கேயோ தாவி விட, மணவாளன் எழுந்து நின்றார்.

இவள் இப்படியே நீளமாய் பேச கொடுக்கக்கூடாது என்ற தீர்மானத்துக்கு வந்தவர்போல, குடை, பையை, மேஜைமேல வைத்துவிட்டு வாசப்பக்கமாய் நகர்ந்தார்.



"இப்ப எங்க கௌம்பிட்டீங்க?"—

"அந்த ஆறுமுகத்தைப் பார்த்து சம்சாரத்த அடக்கி வைச்சிக்கடா, இல்லைனா நா பொல்லாதவனா ஆயிடு வேன்னு சொல்லிட்டு வரத்தான்."

எப்போதும் போல தன் பேச்சை அப்படியே ஏற்றுக் கொண்டு, சின்னதாக 'எதற்காக வலுச்சண்டை' என்று புருஷனைத் தாக்காததோடு, வரிந்து கட்டிக்கொண்டு கணவர் புறப்பட்டது எக்கச்சக்க திருப்தியை தர, தன லட்சுமி கொஞ்சம் தணிந்தாள்.

"புள்ளையையும், பெண்டாட்டியையும் ஒருத்தர் ஒரு வார்த்தை சொல்லிட்டான்றத்துக்காக உடனே நா தான் மதுரை வீரன்னு கௌம்பிடணுமாக்கும்! உட்காருங்க... காபி சாப்பிட்டு, முகம் கழுவிட்டு, அப்புறமா போக லாம். ஆறுமுகம் ஆபீஸ்லேந்து திரும்ப எழு மணி ஆகும், தெரியுமில்லே?"—

மணவாளன் மீண்டும் நாற்காலியில் வந்தமர்ந்தார்.

தனலட்சுமி உள்ளே போனாள்.

அவள் தலை மறைந்த வினாடி, ஏதோ சினிமா பாட்டை முணுமுணுத்துக் கொண்டே வாசக் கதவை திறந்து உள்ளே வந்த கடைக்குட்டி விஜயா இவரைப் பார்த்து 'அம்மா எங்கப்பா?' என்றாள்.

"இப்பத்தான் சமயக்கட்டுக்குப் போனா...என்ன சேதி?"

அவருக்கு பதில் சொல்லாமல் விஜயா அம்மாவைத் தேடி சமயல் அறைக்குச் சென்றாள்.

பத்து நிமிஷங்களில் தனலட்சுமி காபியுடன் வந்து, தம்ளரை அவரிடம் நீட்டினாள்.

"என்னங்க..."

தம்ளரை வாயிலிருந்து எடுத்த மணவாளன் நிமிர்ந்தார்.

'யோசிக்க பார்க்கறீங்களோ, நீங்க உடனே ஆறுமுகத்தண்ட பேசறது வேணாம்னு தான் தோணுது.''—

''............''

''கல்யாணியோட மாமன் வர்றேன்னு வந்திருக்காராம். அவருக்கு ரெண்டாக்கரக்கணோட தொடர்பு உண்டாம். கொஞ்சம் முன்னே பேச்சு வாக்குல நம்ம விஜி குட்டிய பார்க்கணும்னு சொல்ல, அவர் 'அதுக்கென்ன' வர்ற சனிக்கிழமை பார்க்க ஏற்பாடு பண்ணறேன்னு சொல்லி இருக்காராம்... இப்பத்தான் விஜி சொன்னா... நீங்க ஆறுமுகத்தை ஏதாச்சும் சொல்லப் போய், அந்த மாமன்காரனுக்கு கோபம் வந்து பொண்ணைப் அழைச்சிட்டு போகமாட்டேன்னுட்டார்னா! எதுக்குங்க வீண் வம்பு. விட்டுடுங்க...போனாப் போவுது...''

''கல்யாணிகிட்ட நீ மட்டும் ஏடாகூடமா பேசிட்டு வந்திருக்கிறாயே, அது?''—

சாதாரணமாக மனைவி பேச்சுக்கு எதிர்பேச்சு பேசாதவர், இன்று அதிசயமாய் எதிர் கேள்வி போட, என்னது இது—என்கிற திறுபில் தனலட்சுமி நெற்றியை சுருக்கினாள்.

''அப்படி என்ன ஏடாகூடமா பேசிட்டேன்? ம்? ஏதோ அவ கேட்டா, நா பதில் சொன்னேன். விஷயம் அத்தோட முடிஞ்சிது. பொம்பளைங்க சமாசாரம்னு விட்டுடலாம். நீங்க ஏன் மனசுக்கு வெம்பணும்?''—

''மனைவிக்கு கோபம் வந்துவிட்டது என்பதை உணர முடிய மணவாளன் அவசரமாய் ''அதுவும் சரிதான், அதுவும் சரிதான்'' என்றார்.



கல்யாணி எதையும் மனசிலே வச்சிக்கமாட்டா.. எனக்குத் தெரியும்... திரும்பி பூ கட்டி வைச்சிருக்கிறது கொத்து ஒரு முழம் கிள்ளி விஜிகிட்ட அனுப்பினேனே, சமாதானம் ஆயிடுவா... நீங்களும் இதோட விட்டுடுங்க.. நாளைக்கு ஆறுமுகத்தை அங்க, இங்க பார்த்தாலும் இது விஷயமா எதுவும் கண்டுக்காதீங்க...என்ன''—

''அதுவும் சரிதான்'' என்ற மணவாளன் மேலே தொடர்வதற்கு வாசலில் நிழலாட, ''யாரு?'' என்றாள் தனலட்சுமி அதட்டலாய்.

''மணவாளன் ஸார் வீடு இதானே?''—

வந்திருந்தவர் நாலு முழம் வேட்டி, கதர் ஜிப்பா அணிந்திருந்தார். கையில் பழைய குடை, அதைவிட பழசாய், ஒரு பை.

''இதான்... நீங்க யாரு?''—

''என் பேர் சண்முகசுந்தரம், கல்யாண தரகர். மணவாளனோட ஃப்ரெண்டு மணிகண்டன் அனுப்பிச்சாரு.''—

''சட்டென்று தனலட்சுமி குழைந்தாள்.

''தரகரா? வாங்க...என்னங்க சும்மா நிக்கறீங்க, வந்தவங்களை உட்காரச் சொல்லுங்க...இவர் தாங்க நீங்க தேடிட்டு வந்தவரு...''

தரகர் உட்கார்ந்தார்

''காபி சாப்பிடறீங்களா?''—

''இருக்கட்டுங்க...''

தனலட்சுமி உள்ளே போய் காபி கலந்து எடுத்து வர, பின்னோடு, அவர்களின் இரண்டாவது மகள் சரோஜாவும் வந்தாள்.

''நா போயிட்டு வரேம்மா...''

"பத்திரம் சரோஜ்...இருட்டிடிச்சின்னா தனியா வராதே...அப்பா வருவாரு அழைக்க..."

காபியை ஆற்றியபடி தரகர் 'நம்ப பாப்பாங்களா?' என, தனலட்சுமி பெருமையுடன் ஆம் என்றாள்.

"இவளுக்குத்தான் இப்ப வரன் பாக்கறீங்களா?"

"ஐயே... இவ சின்னவங்க... வயசு பதினாறுதான் ஆவுது...எஸ்.எஸ்.எல்.சி. முடிச்சிட்டு சும்மா இருக்க மாட்டேன்னு டைப்பிங் கத்துக்க போறா...நாங்க வரன் பாக்கறது இவ அக்காளுக்கு. அவளுக்கும் வயசு இன்னும் அதிகமாயிடலை...பதினெட்டுதான்."

"உங்களுக்கு எத்தனை பசங்க?"—

"மூணுங்க...முதல்ல பேபி, அப்புறம் இவ, கடைசியா விஜயா..."

"மாப்பிள்ளை எப்படி இருக்கணும்னு விரும்பறீங்க?"—

மணவாளன் மனைவியைப் பார்க்க, அவள் எதிர் நாற்காலியில் வந்தமர்ந்தாள்.

"நாங்க பொண்ணுங்களை உசத்தியா வளக்கறது ஊருக்கே தெரியும்... எங்க புள்ளைங்க எங்களுக்கு அருமை. அந்த அருமை தெரிஞ்சவரை மாப்பிள்ளை அமையணும்...அதான் முக்கியம்..."

"அதுக்கென்னங்க பாத்திட்டா போவுது. மனைக் கண்டன் கூட சொல்லித்தான் அனுப்பினாரு. மணவாளனும், அவர் சம்சாரமும் பிள்ளைங்க மேல உசிரையே வைச்சிருக்காங்க...பார்த்து இடத்தை முடிச்சு கொடுனு பத்து தரம் சொன்னாரு..."

"சொன்னாரில்லே, அப்புறம் என்ன!"—



"ஆனாலும், உங்க வசதி என்ன, என்னென்ன செய்வீங்க, மாப்பிள்ளைக்கு என்னென்ன தகுதி எதிர்பார்க்கறீங்கனு சொல்லிட்டா தேவலை..."

"ஆனா! அதுக்கென்னங்க... நாங்க ஒண்ணும் சொல்ல பழக்காரங்க இல்லை...ஏதோ வசதியா இருக்கோம். அவ்வளவுதான். எங்க சரோஜாவ பாத்தீங்கல்லே...மூத்த ரெண்டு பசங்களும் அவ மாதிரியே கண்ணுக்கு லட்சணமா இருப்பாங்க...சினிமாக்காரிங்களாட்டம் எங்க பொண்ணுங்க இருக்காங்கனு தெருவே சொல்லும். அழகு இருக்குறதால பிள்ளை வீட்டாருங்க சீர், செனத்தி ஒண்ணும் பேச மாட்டாங்கனு எதிர்பாக்கிறோம், என்னங்க?"—

"ஆமாமா..."

"அதுக்காக எங்க பொண்ணுக்கு செய்ய வேண்டியதை நாங்க குறைக்கவும் மாட்டோம். பத்தாயிரம் கையிலே கொடுத்து, இருபது பவுன் நகை போட்டு, சிறப்பா கல்யாணத்தை நடத்திடுவோம்—என்னங்க?"—

இடைவெளிக்காக காத்திருந்த மணவாளர் உடனே "ஆமாமா" என்றார்.

இந்த வீட்டில் நடப்பது மீனாட்சி ஆட்சிதான் என்பதை புரிந்துகொள்ள முடிய, தரகர் நாற்காலியை தனலட்சுமியைப் பார்த்து திருப்பி போட்டுக் கொண்டார்.

"மாப்பிள்ளை எப்படி இருக்கணும், என்ன படிச்சிருக்கணும்...அதையெல்லாம் சொல்லுங்க..."

தனலட்சுமி ஒரு நிமிஷம் மௌனமாய் இருந்தாள், பின் தீர்மானமாகப் பேசினாள்.

"நா சொல்றதை நீங்க சரியா புரிஞ்சுக்கணும். எங்க பொண்ணுங்க எங்களுக்கு ரொம்ப அருமை.

"அதான் முதல்லே சொல்லிட்டீங்க..."

நரசுவை முடிக்க விடாமல் தனலட்சுமி வெட்டினாள்.

"முதல்லே பேசாம இருங்க..எங்க பொண்ணுங்க எங்களுக்கு அருமை..வெயில் படாம பொத்தி பொத்தி வளர்த்திருக்கோம்னா, அது உண்மை. யாராவது எங்க பொண்ணோட அருமை, பெருமை தெரிஞ்சவனா இருக்கணும்னு நாங்க நினைக்கறது நியாயம்தானே...என்னங்க?"—

"நியாயம்...நியாயம்..."

"ஆனா ஹைஹாஸ்னு சுத்த மாப்பிள்ளையா வேணும்னு சொல்லலை...ஆனா எங்க பேபியோட மனசு அறிஞ்சு இதமா நடக்கறவனா அமையறது முக்கியம். பெரிய வேலையை இருக்கணும், கார், பங்களா வெச்சிருக்கணும்ன்ற பேராசை எல்லாம் எங்களுக்கு கிடையாது. அப்படி அமைஞ்சா அது பேபியோட அதிருஷ்டம். ஆனா, வர்றவர் வீட்டோட மாப்பிள்ளையா இருந்திட்டார்னா அதான் எங்களுக்கு சந்தோஷம் தரும். என்னங்க நா சொல்றது? அட... நீங்களும் வாயத் திறந்து பேசினா தான் என்னவாம்?"

மணவாளன் விசுக்கென்று முன்னால் சாய்ந்து உட்கார்ந்தார்.

"தனம் சொன்னமாதிரி வீட்டோட மாப்பிள்ளையா பார்த்திடுங்க நரசரே...தனிக்குடித்தனம், அது இதுனு போனா, பொண்ணு தனியா என்ன பண்ணுதோ, எப்படித் தவிக்குதோனு மனசு படபடக்குனு அடிச்சிகிட்டே இருக்கும். எங்களால பேபிய பிரிஞ்சி இருக்க முடியாது. சொன்னபடி கேட்டுகிட்டு, அடங்கி நடக்கற பையனா பாருங்க போதும்..."

நரசர் மணவாளனையும், தனலட்சுமியையும் மாறி மாறிப் பார்த்தார். தங்களைப் போலவே இன்னொரு தம்பதியை அவர்கள் உருவாக்க முனைந்து விட்டது



சிரிப்பை எழுப்ப, கஷ்டப்பட்டு அதை அடக்கிக் கொண்டு இருமினார்.

"அப்ப, வீட்டுக்கடங்கின மாப்பிள்ளையா இருக்கறது முக்கியம்னு சொல்றீங்க. வேலை, குடும்பம், அந்தஸ்து எல்லாம் இரண்டாம் பட்சம்தான்..."

"அதுக்காக ஒட்டு மொத்தமா எதையும் கவனிக்காம விட்டுட முடியுமா?... அட..."

தொடங்கியவரை தனலட்சுமி தடுத்து நிறுத்தினாள்.

"இருங்க... நா ஒருத்தி இருக்கறதை மறந்திட்டு நீங்க பாட்டுக்கு பேசிட்டே போனா என்ன அர்த்தம்? ஆமாங்க தாய் அப்பா, குடும்பம் இரண்டாம்பட்சம்தான். அம்மா, அப்பா, அக்கானு ஒருத்தரும் இல்லாம இருக்குறவர் மாப்பிள்ளையா வாச்சாருன்னா அது எங்க அதிருஷ்டம் தான்..."

"சரி... சம்பளம் எவ்வளவு இருக்கணும்னு எதிர்பார்க்கறீங்க?"—

"இதெல்லாம் ஒரு கேள்வியாங்க? தாலி கட்டினவளை கண் கலங்காம வெச்சிருக்குற அளவு அவர் சம்பாத்தியம் இருக்கணும். எம்பொண் ஒரு புடவை, ரவிக்கைக்கு ஆசைப்பட்டா தயங்கிகிட்டு நிக்காம வாங்கித் தர்றவரா இருக்கணும். ஐம்பது ரூபாய்க்கு வாயில் சேலை எடுத்துத் தந்தாகூட, அதை வாங்கறப்போ எங்க பேபியையும் கூடவே அழைச்சிகிட்டுப்போய், அவ விருப்பத்துக்கு வாங்கித் தரணும். அப்பப்ப சினிமா, நாடகம், பீச் வகையறாவுக்கு போகணும்னு சொன்னா, முகத்தை தூக்காம, சிரிச்சிகிட்டு கூட்டிகிட்டு போகணும். எதையும் சதா பிடுங்காம, பெண்டாட்டிக்கு மரியாதைக் கொடுத்து, அன்பா நடத்துகிறவரா இருக்கணும். இதான்; வேற பெரிசா ஒண்ணும் வேணாங்க..."

நாகருக்கு புரை ஏறியது. இரண்டு தரம் இருமி தலையில் தட்டிக்கொண்டார். எழுந்து நின்றார்.

"கெளம்பிட்டீங்களா?"

"ஆமா... விவரம் தெரிஞ்சுகிட்டேன். இனியும் சும்மா வெட்டிப் பேச்சு பேசிகிட்டு உட்கார்ந்திருந்தா எப்படி?"

"எல்லாம் சரியா புரிஞ்சுகிட்டீங்க. இல்லே?"—"கச்சிதமா புரிஞ்சுகிட்டேன். வீட்டுக்கு அடங்கினவரா, சொந்தபந்தம் அதிகம் இல்லாதவரா, எட்டு நூறு, எழு நூறு போல சம்பளம் வாங்குவரா கேக்கறீங்க..."

"அதே தான்."

"பார்த்திடுவோம்... நம்ம பாப்பாக்குனு ஒருத்தன் பிறந்திருப்பான் இல்லே...? அப்ப, நா வரேங்க..."

வாசல் வரைக்கும் வந்து மணவாளன் வழி அனுப்ப, நாகர் கிளம்பினார்.

அவர் வந்த நேரம் நல்ல நேரம் என்றுதான் சொல்ல வேண்டும்.

சரியாக மாசம் ஒன்று பூர்த்தி ஆவதற்குள் தனலட்சுமி விரும்பிய வகையிலேயே வரன் ஒன்று சிக்க, அந்த தை மாசம் பதினாறாம் தேதி சுபமுகூர்த்தத்தில், பேபி என்கிற பத்மினியின் கழுத்தில் சாமிநாதன் மூன்று முடிச்சுகளைப் போட்டு தன்னவளாக்கி—இல்லை, இல்லை—அவர்கள் வீட்டு மாப்பிள்ளையாகிப் போனான்.

அந்தக் காலத்திலேயே மணவாளன், தனலட்சுமிக்கு நடந்தது காதல் திருமணம்தான்.

தனலட்சுமி நல்ல அழகோடு சேர்த்தி.

மதர்த்த உடம்பு. சிவந்த நிறம். வெடுக்கென்ற பேச்சோடு வளைய வந்தவளை முதலில் ஒரு கல்யாணத்தில்



பார்த்தபோது மணவாளன் அந்த கணமே மனசை பறிகொடுத்தார்.

அவள் யார் வீட்டுப் பெண், என்ன செய்கிறாள் இத்யாதி விவரங்களை நைஸாக தெரிந்துகொண்டு, அவள் கோவிலுக்குப் போகும்போது பத்தடி பின்னால் நாய்க்குட்டி மாதிரி சென்றார், கடை கண்ணிக்குச் சென்றால் தானும் கூடவே போய் தள்ளி நின்று ரசித்தார். அவள் வெளியில் கிளம்பாமல் வீட்டோடு தங்கிவிட்டாள், துளி வெட்கம் மானம் இல்லாமல் சாலையில் ஒரு பக்கமாக நின்று அவள் முக தரிசனத்துக்காக தவம் செய்தார்.

மணவாளனோடுகூடப் பிறந்தவர்கள் இரண்டு பேர். ஒரு அக்கா, ஒரு தம்பி.

மணவாளனின் தந்தை வசதியானவர்.

படிப்பு ஏறாமல் சுற்றும் மூத்த பிள்ளையை வழிக்கு கொண்டு வர உரக்கடை ஒன்றை ஆரம்பித்து, அதில் உட்கார வைத்துப் பார்த்தார். அந்த நம்பிக்கையும் பொய்த்துவிட, இவனை என்ன செய்யலாம் என்று தவித்துக் கொண்டிருந்த நாழிகையில் தான் பிள்ளை இப்படி ஒரு பெண் பின்னால் சுற்றுவது காதில் விழுந்தது.

ஒருவேளை கால்கட்டு போட்டால் பொறுப்பு வந்து விடுமோ!

அதையும் தான் செய்து பார்ப்போமே என்ற நப்பாசையில் என்ன, ஏது என்று விசாரித்தவர்; தங்களுடைய அந்தஸ்துக்கு ஏணி வைத்தால்கூட தனலட்சுமியின் குடும்பம் வருவது கஷ்டம் என்பதை புரிந்துகொண்டே, அந்தத் திருமணத்தைத் தாமே முன் நின்று நடத்தி வைத்தார்.

கல்யாணமாகி கணவன் வீட்டுக்கு வந்த கையோடு, தனலட்சுமி தன் சொரூபத்தைக் காட்ட ஆரம்பித்தாள்.

என்னமோ மகாராஜா வீட்டில் பிறந்து வளர்ந்த மாதிரி. குனிந்து வளைந்து ஒரு வேலை செய்ய மறுத்தாள். காலையில் எட்டு வரையில் தூங்கினாள். தன் இஷ்டத்துக்கு வேலையாட்களிடம் வேலை வாங்கினாள். மாமனார், மாமியார் எதிரில் காலை நீட்டி உட்கார்ந்துக் கொண்டாள். நாத்தியை மதிக்காமல் வாயாடினாள். தம்பியை அலட்சியப்படுத்தினாள்.

மொத்தத்தில், இவளை வைத்துக் கொண்டு நாம் சமாளிப்பது இருக்கட்டும், ஆயுசு பூராவும் மணவாளன் என்ன பாடுபடப் போகிறானோ என்ற கிலியை தப்பாமல் எல்லாருக்கும் உண்டாக்கினாள்.

ஆனால்,

புருஷனைப் பொறுத்தவரை தனலட்சுமி எள் என்றால் எண்ணெயாக நின்றது பொய் இல்லை.

எந்த விஷயத்தில்?

சொல்கிறேன்—அவசரப்பட்டால் எப்படி?

மணவாளனுக்கு பெண் பித்து எக்கச்சக்கம் என்பதை திருமணமாகுமுன்பே அவளால் சுலபமாக புரிந்துகொள்ள முடிந்ததால், ரொம்ப தாராளமாக அவன் பசிக்கு தீனி போட்டதில்,

தனம், தனம் என்று நேரம் காலம் இல்லாமல் புருஷன் குழைந்ததுக்கெல்லாம் முகம் சுளிக்காமல் ஈடுகொடுத்ததில் மணவாளன் தேன் குடித்த நரியானதிலோ, இல்லை அவள் பிடிக்குள் வசமாய் சிக்கிக்கொண்டதிலோ என்ன ஆச்சரியம் இருக்கிறது?

அவன் கையைப் பற்றினால், இவள் வருடிக் கொடுப்பாள்.

இழுத்து அணைத்தால், மார்பில் சாய்ந்துக் கொள்வாள்.



நாலு பேர்கள் நடுவில் வேண்டுமென்றே உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு, மாரின் துணியை ஒரு பக்கமாக நழுவ விட்டுக் கொண்டு, அவனைப் பார்த்து புன்னகைப்பாள்.

இதெல்லாம் கணவனை வெறிக்கொள்ளச் செய்யும் என்ற அவளது கணக்கு தப்பாமல், அரை மணிக்குள் 'தலை வலிக்குது—தைலம் தேச்சி விடு' என்றோ, 'என் சட்டை பட்டன் இல்லை, தைச்சிக் கொடுத்திட்டுப் போ?' என்றோ அவளை அறைக்கு அழைத்து, அம்மா, அக்கா மற்றவர்கள் என்ன நினைத்துக்கொள்வார்கள் என்ற விவஸ்தை இல்லாமல் கதவை தாள் போட்டு விடுவான்.

இப்படி அவனுக்கு வேண்டியதை அந்தந்த வேளையிலேயே கொடுத்து பழகிய பின், என்னங்க என்றால், என்ன தனம்?'' என்று எழுந்து உட்கார்ந்து கேட்கும் அளவுக்கு செய்து விட்ட திறமையுடன் தனிக் குடித்தனம் போவதைப் பற்றி மெல்ல தனலட்சுமி பேச்செடுத்தாள்.

''உங்க வீட்டுல என்னை மருமகளா யார் நினைக்கறாங்க? வேலைக்காரியா, சமையல்காரியா தானே நடத்தறாங்க?'' என்றாள்.

''நீங்க எம்மேல அன்பா இருக்கறது, ஏன்தான் அவங்களுக்கு உறுத்துதோ தெரியலை... என்னமாச்சும் மருந்து, மாயம் வைச்சு, நம்பளை பிரிச்சிடுவாங்களோனு பயமா இருக்கு'' என்றாள்.

''நேத்து பாருங்க... நீங்க கடைக்குப் போனதும், தெருவுலே நீங்க நடந்த எடத்துலேந்து ஒரு பிடி மண்ணை எடுத்து வந்து உங்கக்கா உங்கம்மாகிட்ட கொடுத்தா, எதுக்குங்க? ஏதாவது மந்திரம், தந்திரம் பண்ணி உங்க புத்திய கெடுக்கறத்துக்கோ?'' என்றாள்.

''நம்ப பேபியக் கண்டா உங்கக்காவுக்கு ஆவறதே இல்லீங்க...அவ மக கறுப்பா பொறந்தா அதுக்கு நாம

என்ன பண்ண முடியும்? என்ன வெறுப்பு வேண்டி யிருக்குது பாச்சை குஞ்சாட்டம்னு என் மூஞ்சிக் கெதிர்லியே கரிக்கறாங்க...எங்க, நம்ப பப்பி பாச்சை குஞ்சாட்டமா இருக்குதா?'' என்றாள்

''சொல்றேன்னு தப்பா எடுக்காதீங்க. உங்க தம்பி பார்வை வரவர நல்லா இல்லீங்க...நா குனிஞ்சி, நிமிர்ந்து வேலை பண்ணறப்போ, ''அங்கங்க நின்னு திருட்டுத் தனமா பார்க்கறாருங்க'' என்றாள்.

இதற்கும் மேல் மணவாளன் பொறுத்துக் கொள் வானா?

சீறிக் கொண்டு எழுந்தான்.

இரவு மனைவி சொல்லிக் கொடுத்து உருவேற்றியதை அப்படியே அப்பாவிடம் ஒப்பித்தான்.

''இது வீடில்லை, நரகம். இனி ஒரு நிமிஷம் எங்களால இங்க வாழ முடியாது.''

''நாங்கள்ளாம் உப்பு போட்டுகிட்டு திங்காத ஜென்மம்னு நினைச்சிங்களா? எங்களுக்கு ரோஷம் மானம் இல்லைனு நினைச்சிங்களா?''—

''வேணாம்...மரியாதையா பழகத் தெரியாத உங்க சகவாசமே எங்களுக்கு வேணாம். சொத்தைப் பிரிச்சு கொடுங்க. எங்க வழில நாங்க போய், கஞ்சியோ, கூழோ குடிச்சிட்டு மானமா வாழறோம்...''

மனைவி கொடுத்த மயக்கத்தில்—அப்பாவோ, அம் மாவோ கூறும் எந்த அறிவுரையும் காதில் ஏறாமல் போக, விடாமல் சண்டை பிடித்து, கடை, லட்ச ரூபாய் பணத்தோடு மணவாளன் விலகி தனிக்குடித்தனத்தைத் தொடங்கினான்.

தனலட்சுமி கெட்டிக்காரிதான்—



பணத்தை செலவழித்து விட்டு நாளைக்குத் திரும்ப அவர்களிடம் போய் நிற்பது அவமானம் என்பதால், முதல் காரியமாய் பணத்தை தன் பேரில் பாங்கில் டெபாசிட் போட வைத்தாள்.

தனியாக வந்தபின் கடையின் லாப, நஷ்டம் நம்மைச் சார்ந்ததுதான் என்பதை நன்கு புரிந்துக் கொண்டு, புருஷனை சரியாக வேலை வாங்கினாள்.

காலையில் ஏழுக்கெல்லாம் கணவனை எழுப்பி, 'போங்க...பொழுதோட கடைய திறங்க; வியாபாரம் கூட ஆகுங்கன்னா, நமக்குதானே நல்லது' என்று விரட்டினாள். மாலையில் ஏழு மணி வரை கடை திறந்து இருக்க வேண்டும் என்பதோடு, மதிய உணவுக்கு மணவாளன் வீட்டுக்கு வருவதையும் தடை செய்தாள்.

''என்ன தனம் இப்படி ஒரேடியா தொரத்திடுறே?'' என்று அவன் வருத்தப்பட்டால், கையைப் பிடித்து கவர்ச்சியாய் சிரித்து ''யாருக்காகங்க? நீங்க நாலு பேர் நடுவுல கௌரவமா வாழணும்னுதானே செய்யறேன்'' என்றாள். பகலில் தன்னைப் பிரிந்து இருப்பதற்கு, மறக்காமல் இரவில் ஈடுகட்டி அவனுக்கு வேண்டிய வகை யில் தான் நடந்துக் கொண்டு, தன் கைப் பொம்மையாக பகலில் அவன் ஆடுவதற்கு வழி செய்தாள்.

ஒரு வருஷம் முழுசாய் சென்று, கடையின் வருமானம் நல்லவிதமாய் வரத் துவங்க, தனலட்சுமியின் வாயும், நாட்டாண்மையும் ஏகத்துக்கு அதிகரித்துப் போயின.

அவள் வீட்டில் மட்டுமல்லாது, தெருவிலும் அவள் வைத்ததுதான் சட்டமாக இருந்தது.

யாராவது துணி எதிர்த்து வாயாடினால் அவ்வளவு தான். உண்டு, இல்லை என்று பந்தாடி விடுவாள்.

மணவாளனுக்கும், தனலட்சுமிக்கும் சினிமா பைத்தியம் அதிகம்.

நாட்டியப் பேரொளி பத்மினியின் பேரில் உள்ள அபிமானத்தை வெளிப்படுத்த மூத்த பெண்ணுக்கு பத்மினி என்று பெயர் வைத்தவர்கள், இரண்டாவதுக்கு சரோஜா தேவி, மூன்றாவதுக்கு விஜயா என்றும் பெயரிட்டனர்

பிள்ளை பிறக்காமல் வரிசையாக பெண்கள் பிறந்ததில் தனலட்சுமிக்கோ, மணவாளனுக்கோ குறையே இல்லை. ஒவ்வொரு பெண் பிறந்ததும் வியாபாரம் இன்னும் வளர்ந்துவிட, "எங்களுக்கு அஷ்ட லட்சுமிகளும் பிறப்பாளுக. அதுக்கெல்லாம் கொடுத்து வைச்சிருக்கணும்" என்று கர்வமாய் பேசினார்கள்.

ஆனால், மூன்றாவதுக்குப் பிறகு தனலட்சுமியின் கர்ப்பப் பையில் கட்டி வந்து, பையையே எடுத்து விட்டதில் அஷ்ட லட்சுமிகள் மூன்று லட்சுமிகளோடு நின்று விட்டதுதான் கடைசியில் நடந்தது.

விஜயாவுக்கு நாலு வயசாகையில் திடீரென்று ஒரு நாள் மணவாளன் தந்தை மண்டையைப் போட்டார்.

"அப்பா தவறி விட்டார், உடனே வந்து காரியத்தை கவனிக்கவும்" என்று ஆள் மூலம் சேதி வந்த பிறகும், கணவனை தனலட்சுமி நகர விடவில்லை.

மதியானத்துக்கு மேல் ஆனதும் தம்பி ஆளவந்தார் அரக்க பரக்க வந்து நின்றான்.

"எல்லாரும் காத்துகிட்டு இருக்காங்க. புறப்படாம என்ன பண்ணிட்டு இருக்கீங்க?"

"ம்? சட்டியும், பானையும் பார்த்தா தெரியலை?"—

"விளையாடாதீங்கண்ணா... உடனே கிளம்புங்க, இருட்டிப் போயிடும்..."



"போகட்டுமே."

"அண்ணா..."

"சும்மா நை நைனு பேசிட்டு நிக்காதீங்க தம்பி, அவருதான் வர இஷ்டமில்லைனு சொல்றார் இல்லே?"—

"புத்தி சொல்ல வேண்டிய நீங்களே இப்படி பேசினா எப்படி அண்ணி? மூத்த மகன் வந்து கொள்ளி வைக்கலேன்னா, ஊர் சிரிச்சிடாதா?"—

"எங்களை தனியா அனுப்பிச்சப்ப மட்டும் ஊர் சிரிக்கலியா?"—

"அப்பா எங்க அண்ணி அனுப்பினாரு? அண்ணா தானே வலிய பிரிஞ்சி வந்தாரு?"—

"வீண் பேச்சு இப்ப எதுக்கு தம்பி? நீங்க நடையை கட்டுங்க."—

சராராய் அண்ணி பேச, குத்துக்கல் மாதிரி அண்ணன் உட்கார்ந்திருக்க, என்ன செய்வது என்று புரியாமல் ஆளவந்தார் அழத் துவங்க, எரிச்சலுடன் தனலட்சுமி கத்தினாள்.

"இந்த நாடகமெல்லாம் இங்க வைச்சிக்க வேணாம்னு உங்க தம்பிகிட்ட சொல்லுங்க...இப்படி இடிச்ச புளி மாதிரி உட்கார்ந்திருக்கா?"

மணவாளன் தயக்கத்துடன் நிமிர்ந்தார். சின்ன குரலில் பேசினார்.

"கிளம்பு தம்பி... வீணா நின்னுகிட்டு இருக்கறதால ஆகப்போறது ஒண்ணுமில்லே... நா வர்றதா இல்லே... கொள்ளி போடறதா இல்லே...அப்புறம்?"—

"இப்படி போட்டு உடைச்ச மாதிரி பேசிடாதீங்க அண்ணா...அம்மா மனசு சிதறி போயிடுவாங்க... தயவு பண்ணி வாங்க..."

"என்னை புள்ளைனு அவங்க ஏத்துக்காதப்போ நா மட்டும் அப்பன்னு ஏன் வரணும்?"

"ஐயோ இது என்ன அசட்டு பேச்சு! உங்களை பிள்ளை இல்லேனு யார் சொன்னது? மூத்த பிள்ளை நீங்க தானே...உரிமை பூரா உங்களுக்கு தானேண்ணா?"

மணவாளன் மனைவியைப் பார்த்தார். அவள் சொல்லுங்கள் என்று ஜாடை காட்ட, கண்களை இடுக்கிக் கொண்டார்.

"அப்ப, கொள்ளி வைக்கறதோட, மத்த உரிமையும் எனக்குத்தான்னு ஒப்புக்கறே..."

"நிச்சயமா...கிளம்புங்க..."

"சரி...கிளம்பறேன்...ஆனா ஒண்ணு..."

"..."

"அப்பா சொத்தைப் பிரிச்சி எனக்குத் தந்தப்போ நியாயமா நடந்துக்கலை...இளிச்சவாயன்னு நினைச்சி கொஞ்சமா தந்து ஒதுக்கிட்டாரு... கிராமத்து நிலமும் வீடும் நீ எடுத்துக்க. நா பங்குக்கு வரலை. ஆனா இங்க பட்டணத்தில இருக்கிற வீட்டை எனக்குக் கொடுத்திடணும். சம்மதம்னா கிளம்பி வரேன். என்ன சொல்றே?"

அந்தப் பேச்சை நம்ப முடியாதது போல ஆளவந்தார் விழித்தான்

கிட்டத்தட்ட ஒன்னரை லட்ச ரூபாய் பெறுமான முள்ள அந்த வீட்டையா?

இது அநியாயம் இல்லையா?



ஒரு நிமிஷம்தான்.

நம்பி முடிவுக்கு வந்து விட்டான்.

"அவ்வளவுதானே... எடுத்துக்கங்க... இப்ப கிளம் பறீங்களா?"—

சந்தோஷத்துடன் மணவாளன் எழுந்து நிற்க, அவ சரமாய் தனலட்சுமி பேசினாள்.

"அ...அ...அப்படி வாய் வார்த்தையா சொல்லிட்டா போதுமாங்க?...நாளைக்கு வார்த்தை மாற மாட்டார் என்றது என்ன நிச்சயம்? இங்க இப்படி சொல்லுவாரு, வீட்டுக்குப் போனதும் அம்மாவும், அக்காக்காரியும் ஏதாச்சும் சொல்லி கலைச்சிட்டா?"—

"அதுவும் சரிதான்" என்ற மணவாளன் உள்ளே போய் பேப்பர் பேனா எடுத்து வந்தார்.

"எழுதிக் கொடுத்திடு—தனம் சொல்றது நியாயம் தான்..."

அண்ணனையும், அண்ணியையும் நாலு அறைவிட எழுந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, நம்பி பட்டண த்து வீடு எனக்கு வேண்டாம், அண்ணனுக்கு கொடுக்க முழு சம்மதம் அளிக்கிறேன், என்று எழுதிக் கொடுத்தப் பின், கிளம்பிப்போய் மணவாளன் தந்தையின் சடலத் துக்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்தாலும், ஊர் கொல்லென்று சிரித்துப் போனது உண்மை.

பெற்ற தகப்பன், பிணமாய் கிடக்கும்போது இப்படி பேரம் பேசினானே. இவனும் ஒரு பிள்ளையா என்று காறி துப்பினார்கள்.

சாவி கொடுத்த பொம்மையாய் அவள் ஆட்டி வைக்கிறாள் என்றால், அவனும் வெட்கம் கெட்டு ஆடு றானே—என்று பின்னால் ஏசினார்கள்.

மணவாளனுக்கு தினமும் ராத்திரி பெண்டாட்டி சுகம் வேணும். அதான் அவ கிழிச்ச கோட்டை தாண்ட பயப்படறான். அவளும் எமகாதகி. படுக்கையிலே என்ன மந்திரம் போடறாளோ, வருஷம் பத்தாகியும் இன்னும் பெண்டாட்டி பித்து கடுகத்தனை குறையாம இருக்கானே—என்று கேலியாய் பேசி நையாண்டி செய்தார்கள்.

எதையும் மணவாளனோ, தனலட்சுமியோ காதிலேயே வாங்கவில்லை.

இன்றைக்கு வாய் கிழிய ஏசுபவர்கள் நாளைக்கு பணத்தை பார்த்தால் தானே வாலைக் குழைப்பார்கள் என்பதை தெரிந்து வைத்துக் கொண்டு தங்கள் இஷ்டப்படியே யாரையும் லட்சியம் பண்ணாமல் வாழ்ந்தார்கள்.

தம்பி, அம்மாவை கிராமத்துக்கு குடி பெயர சொல்லி விட்டு, பெரிய வீட்டுக்கு குடித்தனம் போனார்கள். அத்தனை பெரிய இடம் தங்களுக்கு அதிகம் என்று மாடியை நூற்றி ஐம்பது ரூபாய்க்கு வாடகைக்கு விட்டார்கள்.

வட்டிப் பணம், கடை வருமானம், வாடகைப் பணம் என்று எல்லாமாக சேர்ந்து தாராளமாக புழங்கத் துவங்கியதில், சிக்கனத்தை விட்டு விட்டு தாட் பூட் என்று செலவு பண்ண முற்பட்டார்கள்.

மூன்று பெண்களும் கண்ணுக்கு லட்சணமாய், அழகாய் பிறந்து வளரும் இமிரும் ஏகத்துக்கு கூடிவிட, தங்களுக்கு நிகர் யாரென்று நினைத்து வளைய வந்தார்கள்.

பெண்கள் வைத்தது அந்த வீட்டில் விதிமுறையானது.

இன்றைக்கு சினிமா போகலாம் என்று பேபி சொன்னால் டிக்கெட்டை கறுப்பில் வாங்கியாவது குடும்பமாய் சென்று வந்தார்கள்.



என் சிநேகிதி ராணி புதுமாதிரியான தாவணி உடுத்திகிட்டு வந்தாம்மா— என்று சரோஜா குறிப்பிட்டால், இரண்டாம் நாளே அந்த ரகத் துணியில் மூணுக்கும் புடவை, தாவணி, பாவாடை வந்தது.

சாந்தா பவன்ல பாதாம் அல்வா இருக்குதாம்பா என்று விஜயா குறிப்பிட்டால் அன்று மாலையே வீட்டில் சமைக்காமல் சாந்தா பவனுக்குச் சென்று அல்வாவோடு சிற்றுண்டியும் சாப்பிட்டு வந்தார்கள்.

"இந்த அளவுக்கு செல்லம் கொடுத்து வளர்ப்பது தவறு" என்று யாராவது அக்கறையுடன் கூறினாலும், போயிற்று, கணவனும், மனைவியுமாய் வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்குப் போவார்கள்.

"எங்க புள்ளைங்க எங்களுக்கு உசத்தி உனக்கென்ன?" என்பார்கள்.

"நீ ஒரு மலட்டு ஜன்மம். பத்தாததுக்கு எச்ச கையால காக்கா ஓட்ட மாட்டே...புள்ளைங்க அருமை உனக்கென்ன தெரியும்?" என்பார்கள்.

"உன்கிட்ட வந்து பத்து ரூபா வேணும்னு கேட்டமா? அப்புறம் உனக்கென்ன?" என்பார்கள்.

இன்னதான் கேட்பது என்று இல்லாமல், எதிரில் நிற்பவர்களைப் பதில்களால் அதிர வைத்து, நாணி குறுகிப் போக வைத்து விடுவார்கள்.

இப்படிப் பட்டவர்களிடம் தான், சாமிநாதன் அவர்கள் மூத்த பெண் பேபிக்கு தாலி கட்டியதின் மூலம் வசமாய் மாட்டிக் கொண்டான்.

"என்னங்க?"—

"என்ன பத்மினி?"—

"ஐயே...இதானே வேணாங்கறது... இந்த நாலு நாள்ல எத்தனை தரம் பத்மினின்னு கூப்பிட்டாதீங்க.

ஸ்கூல்ல அட்டென்டென்ஸ் எடுக்கற மாதிரி இருக்குனு சொல்லிட்டேன்!"

"ஸாரி பத்...பாத்தியா திரும்ப அதுதான் வாயில வருது...அழகான பேரை வைச்சிட்டு கூப்பிட வேணாம்னா எப்படிம்மா?"

"எல்லாரும் கூப்பிடற மாதிரி பேபினு செல்லமா கூப்பிடுங்க...அதுவும் பிடிக்கலைனா பப்பினு ஸ்டைலா கூப்பிடுங்க..."

"உன் இஷ்டம் அதான்னா அப்படியே கூப்பிடறேம்மா..."

"ஐயே...இது என்ன அம்மா, அக்கானு சொல்லிட்டு? நா என்ன அத்தனை வயசானவளா?"—

"பதினெட்டு வயசு பொண் உன்னைப் போய் எந்த மடையனாவது அப்படிச் சொல்வானா?"

"அப்ப அம்மா, அம்மானு நீங்க மட்டும் ஏன் சொல்லணும்?"

"சரி சொல்லலை..."

"இப்ப எதுக்கு கூப்பிட்டேன்னு கேக்கவேயில்லியே?"

"எதுக்கும்மா...ஸாரி...ஸாரி...எதுக்கு பப்பி?"—

"ராஜகுமாரிலே புது படம் ரிலீஸ் ஆயிருக்காம் போகலாமா?"—

"சினிமாவா? இன்னிக்குமா? நேத்துதானே போனோம்?"

"போனா என்னங்க? இன்னிக்குப் போனா யாராவது அடிப்பாங்களா?"

"அ...அதெல்லாம் ஒண்ணுமில்லே..."

"அப்ப கிளம்புங்க..."



முகம் கழுவி சிங்காரித்து, புதுப்புடவை உடுத்தி ஸ்டைலான பேபி சாமிநாதன் முன் வந்து நின்றாள்.

"என்னங்க, நா எப்படி இருக்கேன்?"

"இளவரசி மாதிரி இருக்கே!"

"நிஜமாவா?"

"நிஜம்மா..."

"இந்த கலர் புடவை எனக்கு நல்லா இருக்கா?"

"அருமையா இருக்கு...உன் நிறத்துக்கும், இந்த வயசுக்கும் பொருத்தம் 'ஏ' க்ளாஸ்."

"இந்த கொண்டைக்கட்டான்?"

"புது பாஷன்ல அமர்க்களமா இருக்கு பப்பி."

"ஸ்ரீப்ரியா 'நீயா?'ன்ற படத்துல இது மாதிரியே போட்டுகிட்டதைப் பார்த்து எங்கம்மா ஆர்டர் பண்ணி செஞ்சாங்க."

"பிரமாதம்... அதுவும் உனக்கு ரொம்ப நல்லா இருக்கு."

"பேசிகிட்டே நின்னா? படத்துக்கு நாழி ஆகலையா? கிளம்பலாமா?"

செருப்பு மாட்டிக் கொண்ட கணவனை பேபி ஏறிட்டு பார்த்து முகத்தை சுளித்தாள்.

"ஐயே! என்னங்க இது!"

"என்னம்...என்ன பப்பி?"

"நீங்க ட்ரெஸ் பண்ணிகிடலையா?"

"ஏன், இந்த ட்ரெஸ்ஸிக்கு என்ன குறைச்சல்?"

''பாண்ட், ஸ்லாக் போட்டுகிட்டு டிப்டாப்பா வர்றதை விட்டுட்டு, வேஷ்டி, சட்டையா மொவனாட்டம், தாத்தேத்...''

''சலவைலேந்து எடுத்தது பப்பி.''

''வேணாம்...பாண்ட் போட்டுக்குங்க... அப்பதான் நல்லா எனக்கு பேச்சா இருக்கும்.''

புது மனைவியின் ஆசையை கெடுக்க மனமில்லாமல் சாமிநாதன் உள்ளே போய் உடைகளை மாத்திக் கொண்டே புறப்பட்டான்.

''என்னங்க...''

''சொல்லு பப்பி...''

''நானும் பெங்களூர், மைசூர் எல்லாம் ஒரு ரவுண்டு போகணும்னு சொல்லிட்டே இருக்கேன். நீங்க காதுல வாங்காம இருந்தா என்ன அர்த்தம்?''

''ஆபீஸ்ல சும்மா சும்மா லீவு கேட்டாக்கா உதைப்பாங்க பப்பி...போன மாசம் கல்யாணத்தப்ப பதினைஞ்சு நாள் லீவு எடுத்திட்டேன். நீ விரும்பினேனு ஊட்டிக்கு ஒரு வாரம் போயிட்டு வந்தோம்...இப்ப திரும்ப பெங்களூர், மைசூர்னா?''

''அப்ப, நீங்க இஷ்டப்பட்டு ஊட்டிக்கு வரலை?''

''இந்த குதர்க்கப் பேச்சுதானே வேணான்றது?''

''பின்னே நீங்க மட்டும் 'உங்க விருப்பப்படி'னு ஏன் சொன்னீங்க?''

''தப்புதான். ஸாரி பப்பி...''

பேபி புருஷனின் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''பெங்களூர், மைசூர் எப்ப போலாங்க?''

''அடுத்த மாசம் லீவு கேட்டுப் பாக்கறேன்...''



''நிச்சயமா?''

''நிச்சயமா...''

சொன்ன வார்த்தையை காப்பாற்றுபவனாய், அடுத்த மாசம் ஒரு வாரம் விடுப்பு எடுத்துக்கொண்டு, புது மனைவியை பெங்களூர், மைசூர்க்கு அழைத்துச் சென்று வர, தாங்கள் விரும்பிய வகையில் மாப்பிள்ளை அமைந்து விட்டதை எண்ணி மணவாளனும், தனலட்சுமியும் ஒரு சுற்றுப் பருத்துப் போனார்கள்.

● ● ●

''என்னங்க...''

''ம்?''

''நாளைக்கு சாயங்காலம் நாம் நாடகத்துக்குப்போக டிக்கெட் எடுத்திட்டீங்க இல்லே!''

''எடுத்திட்டேன்.''

''முதல் வகுப்புதானே?''

''ஆமா...ஆமா...''

''நா என்ன புடவை உடுத்திக்கட்டும்?''

''ஆபீஸுக்கு புறப்படறப்போ என்ன தொண தொணப்பு இது பப்பி?''

''என்ன, என்ன சொன்னீங்க? நா தொண தொணக்கறேனா?''

கண்களைக் கலக்கிக் கொண்டு, குரல் கம்ம அவள் பேசுவதாகப் பட, அவசரமாய் சாமிநாதன் தழைந்தான்.

''தெரியாம சொல்லிட்டேன்...ஞாபகம் எங்கயோ இருந்திச்சி...ஸாரி பப்பி...என்ன கேட்டே? என்ன புடவை உடுத்திக்கட்டும்னுதானே! ம்ம்? அந்த ஆரஞ்ச் நிற

ஆர்கென்ஸாவ உடுத்திக்கயேன். உனக்கு ஜோரா இருக்கும்..."

"ஐயே... அது வேணாங்க... போன வாரம் ஹோட்டலுக்குப் போனப்ப அதைத்தான் உடுத்திக்கிட்டேன்..."

"ம்ம்? அந்த வெள்ளைல சிகப்பு பிரிண்ட் போட்ட பட்டு சேலை?"

"முத்தா நாள் சகுந்தலா வீட்டுக்குப் போனப்ப அதைத் தான் உடுத்திக்கிட்டேன். மறந்திட்டீங்களா?"

சாமிநாதன் மணிக்கட்டை திருப்பி, கடிகாரத்தைப் பார்த்தான்.

"உனக்கு எது இஷ்டமோ அதை உடுத்திக்கயேன் பப்பி..."

பேபி பெருமூச்சுடன் கட்டிலில் உட்கார்ந்தாள்.

"அலமாரியத் திறந்தா புடவையே இல்லாத மாதிரி தோணுதுங்க..."

"உனக்கா இல்லை? அடுக்கி வைச்சிருக்கியே?"

"எல்லாம் பழசாயிட்ட மாதிரி இருக்கு. எங்க, இப்ப பண்ணா என்ன? 'கைத்தறி கண்காட்சி நடக்குது. மத்தியானமா போயிட்டு வரலாம் வா'ன்னு அம்மா கூப்பிட்டாங்க. போயிட்டு, அப்படியே ஒரு சேலை நல்லதா வாங்கிட்டு வரட்டுமா?"

"நாளைக்கு நாடகத்துக்கு உடுத்திக்க, இன்னிக்கு புதுசா சேலை வாங்கறேன்னா சொல்றே, பப்பி?"

"அதேதான்..."

சாமிநாதன் தயங்கினான்.

"இந்த மூணு மாசத்துல நாலு சேலை வாங்கிட்ட போல இருக்கே..."



"அதனால?"—

"அதனால இப்ப புதுசு வேணுமானு யோசிக்கிறேன்..."

"நாலு புடவைல்ல இரண்டு எங்கம்மா வாங்கிக் கொடுத்தது; நினைப்பு இருக்கட்டும்."

"யாரு பணம் கொடுத்தா என்ன பப்பி? அனாவசியமா எதுக்குனுதான்..."

பேபி இடுப்பில் கைகளை ஊன்றிக் கொண்டு எழுந்து நின்றாள்.

"அப்ப, நான் அனாவசிய செலவு பண்றேனு சொல்றீங்க!"—

"அப்படியா சொன்னேன்? நா எது சொன்னாலும் குதர்க்கமா எடுத்துக்கிட்டா? இப்ப புடவை எதுக்கு அனாவசியமானுதானே..."

அவன் பேச்சை காதில் வாங்காமல் விருக்கென்று கோபத்துடன் பேபி அறையை விட்டு வெளியே போய் விட, சாமிநாதன் சிற்றுண்டி சாப்பிட வருவதற்குள் சேதியைக் கேள்விப்பட்டு பெண்ணுக்காகப் பரிந்து கொண்டு தனலட்சுமி வந்து விட்டாள்.

"எங்க பேபி அனாவசிய செலவு பண்றானு சொன்னீங்களாமே? இது என்னங்க நியாயம்! குழந்தை ஏதோ ஆசைப்பட்டு புடவை கேட்டுச்சுன்னா, இப்படி பேசியா மனசை நோக அடிப்பாங்க? அப்படி என்ன நினைக்கும் எங்க பேபி இது வேணும், அது வேணும்னு நச்சரிக்கறா. பொண்டாட்டி விருப்பம் அறிஞ்சு நடக்கறவன்தான் நல்ல புருஷனா இருக்க முடியும். எங்க பேபி கண் கலங்கினா எங்களால தாங்க முடியாது. இந்த ட்ரிப் நா வாங்கிக் கொடுத்து சமாதானம் பண்ணிடறேன்; ஆனா,

இனியொரு தரம் இப்படி அவ மனசை நோக அடிக்க மாட்டீங்கன்னு நம்பறேன்."

நிஜமாய் தனலட்சுமி, மாப்பிள்ளை என்று பார்க்காமல் லெக்சர் அடிக்க, அரண்டு போன சாமிநாதன், சரி சரி என்று பூம்பூம் மாடு தலையை ஆட்டிவிட்டு, டிபன்கூட சாப்பிடாமல் ஆளை விட்டால் போதும் என்று எழுந்து ஓடிப் போனான்.

"என்னங்க..."

"......"

"கூப்பிடறது காதுல விழலை?"

"ம்ம்... தூக்கம் வருது பப்பி"—

"வரும்...வரும்... அது என்ன அசுரத் தூக்கமோ, ராத்திரி ஒன்பது மணிக்கெல்லாம்..."

"ஆபீஸ்ல வேலை பண்ணிட்டு வர்றது அசதியா இருக்கு பப்பி."—

"ஆமா, இவரு ஒருத்தர்தான் ஊர் உலகத்துல இல்லாத அதிசயமா வேலை பார்க்கறாரு..."

"எதுக்கு எழுப்பினே...சொல்லு..."

"ஒண்ணுமில்லே...நீங்க தூங்குங்க."

சாமிநாதன் எழுந்து உட்கார்ந்தான். ஆனை அசத்திய உறக்கத்தை ஒதுக்கிவிட்டு "சொல்லு பப்பி" என்றான் கெஞ்சலாய்.

"எங்கப்பாவும்தான் கடைல நாள் பூரா உழைச்சிட்டு வரார். ஆனா, ஒரு நாள் கூட இப்படி கும்பகர்ணனா, பொண்டாட்டிய மறந்திட்டு அவர் பாட்டுக்கு தூங்கிறதா பார்த்ததில்லே..."

"......"



"நிஜமா தாங்க...அவங்களுக்கு கல்யாணமாகி வருஷம் இருபதாகுது. ஆனா, அவங்களுக்குள்ளார இருக்குற நெருக்கம்கூட, நாலு மாசம் ஆன நமக்குள்ள இருக்குறதா எனக்குத் தோணலை..."

"இன்னிக்கு ஒரு நாள் ஏதோ அசதி, தூங்கிட்டேன். அதுக்காக...என்ன பப்பி...நீ?"

"இல்லே—சமாளிக்காதீங்க. எங்கம்மா பேர்ல அப்பா வைச்சிருக்குற பிரியம், நீங்க என் பேர்ல வைக்கல"—

சாமிநாதன் கொட்டாவியை அடக்கிக் கொண்டு, லேசான எரிச்சலுடன் பேசினான்.

"எதுக்கெடுத்தாலும் உங்கப்பா, அம்மாவோட நம்மளை நீ ஒப்பிடறது சரியில்லேனே எனக்குத் தோணுது."

"ஏன் சரியில்லே...உண்மையைச் சொன்னா ஐயாவுக்கு உறைக்குதாக்கும்..."

"உன் பேர்ல நா எவ்வளவு ஆசை வைச்சிருக்கேன்னு உனக்குப் புரியலை பப்பி..."

"இந்த கட்டுக்கதை நம்மகிட்ட வேணாம் சொல்லிட்டேன். வர வர என்னை நீங்க சரியா பாக்கறதுகூட இல்லை. இந்த லட்சணத்துல பேச்சு வேற..."

"நீயா எதையாவது கற்பனை பண்ணிகிட்டா, அதுக்கு நா எப்படி பொறுப்பு?"

கற்பனையும் இல்லே, மண்ணாங்கட்டியும் இல்லே. இன்னிக்கு நானே வர்ணம் தீட்டின புடவையை சாயங்காலம் உடுத்திகிட்டு இருந்தேன். அம்மா, அப்பா, தங்கச்சிங்கல்லாம் 'ரதியாட்டம் இருக்கே'ன்னு பாராட்டினாங்க. ஆனா நீங்க? என்னை நிமிர்ந்து கூட பார்க்கலை..."

"ஸாரி பப்பி...இன்னிக்கு ஆபீஸ்லேர்ந்து வரும்போது ரொம்ப லேட்டாயிடிச்சு. அதோட செமை தலைவலி, அதான்."

"வேணாங்க...சப்பை கட்டு கட்டாம, ஆமா, உன் பேர்ல எனக்கு நாட்டம் குறஞ்சிடுச்சினு ஒத்துக்குங்க...நா சிறப்பா வர்ணம் தீட்டினா என்ன, அந்தப் புடவை எனக்கு ஒத்தொரு பேட்ச் ஆனா உங்களுக்கு என்ன?"

சின்னச் சின்ன விகல்பங்களோடே பேசி பேச, சாமிநாதன் பதறி போனான்.

"பப்பி...என்னைப் பாரும்மா. ஒண்ணுமில்லாததை நினைச்சு கற்பனை பண்ணிகிட்டு உன்னைக் குழப்பிக்காதே. ப்ளீஸ்."

"விடுங்க...என் கையை விடுங்க. பொண்டாட்டி அருமை தெரியாத மனுஷனுக்கு ஒரு கல்யாணம் எதுக்கு?"

காட்டமாக பேசிவிட்டு, தலைகாணி, பாயை தரையில் போட்டுக் கொண்டு தனியாக படுத்த பேபி, இரண்டு நாட்கள் கணவனுடன் பேசாமல் இருந்து தன் கோபத்தைக் காட்டினாள்.

சண்டை, பூசல் என்றால்—இதுதான் ஆரம்பம்...

இதன் பிறகு அவளுடைய கோபதாபங்கள், தலைகாட்டலில், மணவாளனின் குறுக்கீடுகள் கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாக, திருமணமாகி ஏழு மாதங்கள் ஆன பின் பெற்றோரின் அருகாமையும், அவர்கள் தரும் செல்லமும் மனைவியை தன்னுடன் ஒட்டாமலேயே இருக்கச் செய்கிறது என்பதை உணர்ந்து மாமனார் வீட்டு மாப்பிள்ளையாக வாழ்ந்தது போதும் என்ற துணிச்சலுடன் தீர்மானித்து ஒரு நாள் இரவு தனிமையில் மனைவியிடம் தனிக்குடித்தனம் போவதைப் பற்றி சாமிநாதன் பேசினான்.



"அம்...மா....ஆ..."

அலறிக் கொண்டு ஓடி வந்த மகளைப் பார்த்து தனலட்சுமி ஆடிப் போனாள்.

"என்னடிக் கண்ணு...என்ன நடந்திச்சு?"

"அருமையா தேடித் தேடி பிடிச்சிங்களே, மாப்பிள்ளை, அவர் தனிக்குடித்தனம் போகணும்னு சொல்றாரும்மா..."

"ஏ...என்னது?"

"உனக்கே இப்படி பதறுதே...அப்ப, எனக்கு எப்படி இருக்கும்னு யோசிச்சு பாரு..."

"இரு... இரு... நிதானமா என்ன சொன்னார்னு சொல்லு."

"டி.வி. பார்த்திட்டு படுக்கப் போனப்போ கொட்டாப் புளியாட்டம் முழிச்சிகிட்டு உட்கார்ந்திருந்தாரு... நா போய் படுத்ததும் 'உன்னண்ட பேசணும்'ன்னாரு... என்னடா சொல்லப் போறாருனு திரும்பிப் பார்த்தா, 'நாம தனிக்குடித்தனம் போயிடலாமா பப்பி?...என் சிநேகிதன் ஒருத்தன் வீட்லே மாடி போர்ஷன் காலி ஆகுது...புது வீடு...நீயும், நானும் மட்டும் தனியா...என்ன சொல்றே?'ன்னாரு, எனக்கு ஒரு நிமிஷம் ஒண்ணும் புரியலைம்மா..."

"தமாஷாச்சும் விளையாட்டுக்குச் சொல்லி இருப்பாரு, பேபி..."

"அப்படித்தாம்மா நானும் நினைச்சேன். ஆனா, முகத்தை சீரியஸா வைச்சிகிட்டு, 'சத்தியமா சொல்றேன். இந்த வீட்டுல நா நிம்மதியாவே இல்லே...உன்னோட தனியா போயிடறதுதான் நாம மகிழ்ச்சியா இருக்க ஒரே வழி'னு சொன்னதும் அரண்டு போயிட்டேன்."

"என்ன ஆச்சு இந்த மனுஷனுக்கு? புத்திய யாராச்சும் கெடுத்திட்டாங்களா?"

"என்ன எழவோ? கொஞ்ச நாளாவே அவர் பேச்சு வார்த்தை நல்லா இல்லேனு நா உன்கிட்ட சொல்லலை?"

"ம்"—

"கோச்சுகிட்டு தனியா படுத்தா வந்து சமாதானம் பண்ண மாட்டாரு? பேசாம முகத்தை தூக்கி வைச்சுகிட்டா, கண்டுக்காம போவாரு... மொத்தத்துல அப்பா மாதிரி நல்ல குணம் இல்லேனு நா வருத்தப்பட்டுகிட்டப்போ, 'எல்லாம் தானா சரியாயிடும்'னு நீ சமாதானம் பண்ணினே, இப்போ?"

தனலட்சுமி கரிசனத்துடன் மகளை ஏறிட்டு, இதமாக பேசினாள்.

"புருஷனை வழிக்கு கொண்டு வர்றது நம்ம கையில இருக்குன்றதால, போகப் போக சரியாயிடுவார்னு சொன்னேன். அவங்களுக்கு வேண்டியதை நாம கவனிச்சு கொடுத்தோம்னா, தானா நம்ப பாதைக்கு தாவி வந்திடுவாங்க பேபி..."

"எங்கம்மா! நீ அப்பாவயே மனசிலே வைச்சிகிட்டு பேசாத... இந்த மனுஷனுக்கு தேவை எதுவும் இருக்குறதா எனக்குத் தெரியலை..."

"நீ ஆசை காட்டி ருசி கண்ட பூனையாக்கினா தன்னால அடங்கறாரு?"

"ஐயே! இந்த மனுஷன் சன்னியாசியா போக வேண்டியவரும்மா... தப்பிப்போய் தாலி கட்டிட்டாரு."

"ம்ம்? அதவிடு, இங்க அவருக்கு என்ன குறைச்சலாம்? எதுக்காக ஜம்புன்னு, உன்னை விரட்டறாரு?"



பேபி கொஞ்சம் தயங்கினாள்.

"சொன்னா கோவிச்சுக்க கூடாதும்மா, நீயும், அப்பாவும் எங்க வாழ்க்கைல ரொம்ப தலையிடறீங்களாம். கல்யாணமானப்பறமும் இப்படி பொன் விஷயத்துல பட்டுக்கறது அதிகமாம்... அவங்ககிட்டேயிருந்து உன்னைப் பிரிச்சாதான் உனக்குப் பொறுப்பு வரும்னே அவரு வெளிப்படையா சொன்னாரும்மா..."

தனலட்சுமி கோபத்துடன் புருவங்களை நெறித்தாள். கை விரல்களை சொடுக்கிக்கொண்டு ஆகவேண்டியது என்ன என்று யோசித்தாள்.

"உன்னை குறை சொல்லறதோட நிக்காம எங்க வரைக்கும் வந்திட்டாரா? ம்ஹும் இதை இப்படியே விடக்கூடாது. பாத்திடுவோம்" என்று முனகியவள் வேகமாக தன் அறைக்குச் சென்று மணவாளனிடம் அத்தனையும் கூறி மாப்பிள்ளைக்கு புத்தி சொல்லுவது தங்கள் கடமை என்று அவரையும் இழுத்துக்கொண்டு முன் அறைக்குப் போனாள்.

படுத்துக் கொண்டிருந்த சாமிநாதன் எழுந்து நின்றான்.

தனிக்குடித்தனம் என்றதுமே, பேபி அரண்டு ஓட, சரி, எந்த நிமிஷமும் மாமியார்காரி விஜயம் செய்யலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்ததால் அந்த ராத்திரி பொழுதில் தம்பதி சமேதராய் அவர்கள் வந்ததில் அவன் ஆச்சர்யப்படவில்லை.

மணவாளன் பேச்சை ஆரம்பித்தார்.

"ஆபீஸ்ல வேலை அதிகமா? வரவர ரொம்ப தாமதமா வராப்பல தெரியுதே!"

"ஆமா."

"தலைவலி, உடம்பு வலினு அடிக்கடி படுத்திடறதா பேபி சொன்னா. வேணா நல்ல டாக்டர்கிட்ட போய்க் காட்டறது."

"சரி."

மேல் கையில் உட்கார்ந்த கொசு ஒன்றை சட்டென்று மணவாளன் அடித்தார்.

"கொசு அதிகமா இருக்குது... வேணா..."

இனி தாங்கமுடியாது என்பதுபோல தனலட்சுமி சற்றென்று வெடித்தாள்.

"அட.. நீங்க என்னங்க... விசாரிக்க வந்த சேதிய கேட்காம, ஆபீ சௌக்கியமா, கொசு, கொரங்கு அதிகமானு கேட்டுகிட்டு! நானே கேட்கிறேன். என்ன, மாப்பிள்ளை. பேபி கிட்ட என்னமோ புதுசா சொன்னீங்களாமே... இதெல்லாம் உங்களுக்கே நல்லா இருக்கா."

"... ... ..."

"சாதுவாட்டம் எங்களை கண்டா அடங்கிப் போயிடறீங்க... ஆனா, அந்த வாயில்லா பொண்ணை மட்டும் வார்த்தையால பத்தாடறீங்க... நல்லவர், வேறுனு நினைச்சி பொண்ணைக் கொடுத்தது தப்பாயிட்டதுபோல இருக்கே... என்னங்க வாயில என்ன கொழுக்கட்டையா? மாப்பிள்ளைக்கு புத்திமதி சொல்லறது..."

"ஆமாம் மாப்பிள்ளே... புத்திகெட்டு எதையாவது சொல்லாதீங்க...பேபி இடிஞ்சு போச்சி...உங்களுக்கு இன்ன என்ன குறை? யாராவது ஏதாவது சொன்னா, எடுப்பார் பிள்ளையாட்டம் கேட்டுகிட்டு தலை ஆட்டாம, நல்லது கெட்டது புரிஞ்சி நடந்துக்கங்க... என்ன?"

இதற்கும் பதில் பேசாமல் சாமிநாதன் நிற்க, சரி. இவன் தவறை உணர்ந்துவிட்டான். இனி வாலாட்டமாட்டான் என்ற நம்பிக்கை பிறக்க, புருஷனும், மனைவியும்



சேர்த்துக்கொண்டு பத்து நிமிஷம் அங்கேயே நின்று மாப்பிள்ளைக்கு அறிவுரை சொல்லிவிட்டு நகர்ந்தார்கள்.

அடுத்து வந்த ஒரு மாசமும் சாமிநாதன் தனிக்குடித்தனப் பேச்சை எடுக்கவில்லைதான். ஆனால் இந்த வீட்டில் இருப்பது தனக்கு திருப்தியை அளிக்கவில்லை என்பதை செய்கையால் காட்ட, தினமும் காலை எட்டுக்கெல்லாம் அலுவலகத்துக்குப் போய்விட்டு, இரவு எட்டு மணிக்கு மேலேயே திரும்ப ஆரம்பித்தான். பேபியுடன் அனாவசியமாக பேசுவதைத் தவிர்த்தான். அவளுடன் வெளியே போகாமல் இருப்பதற்கு கட்டாயம் சாக்கு சொல்ல முற்பட்டான். அப்புறம்...

என்ன செய்து என்ன?

இந்த நடவடிக்கைகளால் பேபி பாதிக்கப்படாதது மட்டுமின்றி, அட, நீ முறைத்துக்கொண்டால் எனக்கு மட்டும் முறுக்கிக்கொள்ளத் தெரியாதா என்று பாராமுகமாக இருந்ததுதானே அதிகமாயிற்று.

"யார் கிட்ட தன் கோவத்தைக் காட்டறதா நினைச்சிட்டு இருக்காரு? நீ பேசாம இரு பேபி கண்ணு... வைக்கற இடத்துல வைச்சி... பல்லை பிடுங்கிடலாம்... கவலைபடாதே..." என்று அம்மாவின் போதனையும் சேர்ந்து கொள்ள, கண்ணைக் கட்டிவிட்ட குதிரையாக தன் இஷ்டப்படியே நடந்தாள்.

தங்கைகளை அழைத்துக்கொண்டு மாலை ஆட்டம் சினிமாவுக்குப் போனாள். அம்மாவோடு கடை கண்ணி சுற்றிவிட்டு வந்தாள். அப்பாவை துணைக்கு இட்டுக்கொண்டு தோட்டங்களுக்கும் விஜயம் செய்தாள்.

"அந்த மனுஷனை நல்லா காயப்போடு... தானா அடங்கிவிட்டு உன் பின்னால வருவான்" என்ற மரியாதை இல்லாமல் அம்மா ஏக வசனத்தில் புருஷனைப்பற்றி பேசிய

போது. நீ சொல்றதுதான் சரி' என்று ஆமோதித்தாள்.

''உன் பெக்கு புருஷன் ஆபீஸ்லேந்து வந்தாச்சக்கா... முன் ரூம்லபோய் உட்கார்ந்துகிட்டு நீ வருவியோனு இருந்து முழிக்குது'' என்று தங்கைகள் விமரிசித்தால் ரசித்து மகிழ்ந்தாள்.

இவற்றோடு, புருஷன் மாலையில் வீடு திரும்பியதும் உள் அறைக்குச் சென்று 'என்ன வேணும்?' என்று கேட்காமல் இருக்கத் தொடங்கினவள், மேற்கொண்டு சில நாட்கள் போவதற்குள் மேஜைமேல் சாப்பாட்டை வைத்து மூடி விட்டு 'பசிச்சா சாப்பிடுங்க, நாங்க டி.வி. பார்க்கணும்' என்று சொல்லக்கூட தலைப்பட்டாள்.

இது போதாது என்று, கோபத்தில் கணவன் சாப்பிடாமல் படுத்தாலோ, இல்லை வெளியில் போய் விட்டாலோ 'அம்மா, அதுக்கு கோபம்? சாப்பிடாம போயிடுச்சி' என்று கேலமாக கேலிபண்ணவும் துணிய— சாமிநாதன் விழித்துக் கொண்டான்.

''இனியும் இந்த வீட்டில் இருந்தால் நான் ஆண் பிள்ளையே இல்லை'—என்ற முடிவுக்கு வந்து, ரோஷம் தந்த உந்துதலில் நண்பன் வீட்டுப் போர்ஷனுக்கு அட்வான்ஸ் கொடுத்து விட்டு, மிகத் துணிச்சலுடன் 'நீ வந்தால் வா, வராவிட்டால் போ' என்று தன் சாமான்களைத் தூக்க—இத்தனை அடாவடித்தனத்தை மாப்பிள்ளையிடம் எதிர்பார்க்காத தனலட்சுமியும், மணவாளனும் திடுக்கிட்டுப் போனார்கள். 'இப்ப நா என்னம்மா செய்வேன்?' என்று வெள்ளம் தலைக்குப் போய்விட்ட ஆத்திரத்தில் பேபி கையைப் பிசைந்தாள்.

சாமான்கள் ஏற்றப்பட்டு வாசலில் நிற்கும் டெம்போவைப் பார்த்து, 'என்னங்க...வெளியூருக்கு மாத்திட்டாங்களா? சொல்லவேயில்லியே?' என்று விசாரிக்கும் தெரு ஜனங்கள் வேறு!



தனலட்சுமிதான் முதலில் சுதாரித்துக் கொண்டாள்.

''நம்பளை மீறி அவன் போகத் துணிஞ்சிட்டானா? போகட்டும்...எத்தனை நாள் பொண்டாட்டி சுகம், நம்ம அரவணைப்பு இல்லாம வாழ்ந்திடுவான்னு பார்த்திடுவோம்...''—என,

மறக்காமல் மணவாளன் 'அதானே' என்றார்.

''பக்கத்து, எதிர் வீட்டுலே சாமானை ஏன் தூக்கறீங்க? வெளியூரா? இல்லே உள்ளூர் தனிக்குடித்தனமா? 'அவரு மட்டும் எங்க போறாரு...நீ கூடப் போகலியா'னு என்னென்னவோ கேக்கறாங்களேம்மா— என்ன பதில் சொல்லலாம்?''

''கேப்பாங்க...வேலை வெட்டி இல்லாத மூதேவிங்க. நீ ஏண்டி அதுக்கெல்லாம் நின்னு பதில் சொல்றே? ம்?''— தனலட்சுமி கொஞ்சம் யோசித்துவிட்டு தொடர்ந்தாள். ''சரி திரும்ப கேட்டாங்கன்னா, பயப்படாம தனிக்குடித்தனம் போறோம்'னு சொல்லு.''

''போறோம்—னா... அப்ப, என்னையும் போகச் சொல்றியாம்மா?''

''உன்னைப் பிரிஞ்சி எங்களால எப்படி இருக்க முடியும் பேபி கண்ணு...சும்மா பேச்சுக்குத்தான். ஊர் வாய அடைக்கறதுக்காக நீயும் போறாப்பல அவனோடு இன்னிக்குப் புறப்படு...இரண்டு நாள்ல நானும் அப்பாவும் வந்து நல்ல நாளாயிருக்குனு சொல்லி இங்க அழைச்சிட்டு வந்திடறோம். உனக்கு அஞ்சாம் மாசம் பொறந்தாச்சி...பலவீனமா இருக்குனு, உடம்புக்கு முடியலைனு கூட்டிகிட்டு வந்தா, பிள்ளை பெத்த அஞ்சாம் மாசம் தான் திரும்ப கொண்டு விடற பேச்சே வரும்... அப்ப பாத்துக்கலாம்... அதுக்குள்ளார இவனுக்கு புத்தி வந்திடாதா?'

தனிக்குடித்தனம் போய் விட்டாள். எப்பாடுபட்டாவது, மனைவியைத் திருத்தி விடலாம் என்று சாமிநாதன் மன கணக்குப் போட்டது நடக்கவிடாமல் பேபியின் கர்ப்பம் குறுக்கே நிற்க, தனலட்சுமியின் இட்டப்படி, அஞ்சாம் மாசம் பிறந்த வீட்டுக்கு வந்தவள், பிள்ளை பெற்று பல மாசங்கள் ஆன பிறகும் புருஷன் வீட்டுக்குத் திரும்பாமல் இருக்க, வீசி எறியப்பட்ட பந்து போல இங்கும் அங்கும் அவன் அல்லாடியதுதான் கடைசியில் மிச்சமானது.

''பூவரசம் பூ பூத்தாச்சு
பொண்ணுக்கு சேதியும் வந்தாச்சு...
காவேரி போல...''

கண்ணாடிக்கு முன் நின்று விஜயா முதல்நாள் பார்த்த கிழக்கே போகும் ரயில் கதாநாயகி ராதிகாவாக தன்னைப் பாவித்துக் கொண்டு, இப்படியும் அப்படியும் திரும்பி பாட்டை முனக, சற்றுத் தள்ளி அமர்ந்து ராணி முத்து நாவலில் ஆழ்ந்திருந்த சரோஜா, தலையைத் தூக்கி சிடுசிடுத்தாள்.

''என்னடி பண்ணறே கண்ணாடி முன்னால அரை மணியா நின்னுகிட்டு?''

''தெரியலை? தலை பின்னிக்கறேன்.''—

''நல்லா பின்னிட்டே! எத்தனை தரம் இதுவரை அவிழ்த்துப் பின்னியிருப்பே?''—

''என்ன, ஒரு ஏழெட்டு தரம்...''

சிரிப்புடனே விஜயா பதில் சொல்ல சரோஜாவின் எரிச்சல் அதிகமானது.

''எது கேட்டாலும் பட்பட்டுனு வாயாடிடு... இந்த சாமர்த்தியத்தை படிப்புல காட்டினா தேவலை...''

''வேணாம் சரோஜி...வீணா என் வம்புக்கு வராதே.''



''பீத்தல் எஸ். எஸ். எல். ஸி. படிச்சிட்டோம்னு ரொம்ப எகிறாதே...''

''பீத்தல் எஸ்.எஸ்.எல்.ஸி. மட்டும் இல்லேடி விஜி... டைப்பிங், ஷார்ட் ஹாண்ட் பாஸ் பண்ணிட்டேன். அதையும் சேர்த்துக்க... நிச்சயமா உன்னை மாதிரி தண்டச் சோறு, மக்கு பிளாஸ்திரி இல்லே... நினைப்புவைச்சுக்க''...

விஜயா பின்னலை பின்னால் தள்ளிக் கொண்டு திரும்பி நின்றாள்.

''என்னமோ நீ சம்பாரிச்சு கொட்டற மாதிரியும், நா வெட்டிக்கு உட்கார்ந்து சாப்பிடற மாதிரியும் பேசினா எனக்கு கோவம் வரும். பள்ளிப் படிப்பு படிச்சிட்டா என்ன? கலெக்டர் உத்தியோகமா பார்க்கமுடியும்? எனக்கு படிப்பு வரலைதான். ஆனாலும் நா பாடுவேன், ஆடுவேன் அதெல்லாம் உனக்கு கட்டுப் போட்டாலும் வருமா... எதுக்கோ தெரியுமா ஏதோ வாசனைன்ற மாதிரி...''

''இந்தா... இந்தா... பெரியவன்ற மரியாதை இல்லாம கழுதை, கிழுதைனா நா பொல்லாதவளா ஆயிடுவேன். பாட்டும், நாட்டியமும், தெரிஞ்சு என்ன பிரயோஜனம்? நாளைக்கு உன்னைக் கட்டிக்கப் போறவனை உட்கார வைச்சி இருவத்தி நாலு மணி நேரமும் ஆடி, பாடி காட்டிகிட்டே இருப்பியா?''

''ஏன் செய்யமாட்டேன். வர்றவனும் கண்டிப்பா என்னை மாதிரியே கலை ரசனை உள்ளவனா வருவான். அதனால எப்பப் பாரு எங்க வீட்டுலே பாட்டும், நாட்டியமும் அமர்க்களப்பட்டுகிட்டே தான் இருக்கும்...''

''ஆமா, சரியான கூத்தாடி வீடா இருக்கும். எனக்கென்ன... படிப்போம், உலகத்துல நடக்குற நல்லது கெட்டதை புரிஞ்சிப்போம்னு இல்லை... பாட்டு... டான்ஸ்... கூத்...''

"நீ மட்டும் பெரிய காலேஜ் படிப்பு படிச்சி கிழிச்சிட்டே... வெறும் எஸ். எஸ். எல். சி. போடி."

"ஏ, இ, சொன்னே கொன்னு பிடுவேன்."

"எங்க, கொல்லு பார்க்கலாம்..."

சரோஜா புத்தகத்தை கீழே போட்டு விட்டு தங்கை மேல் பாய. அவள் அம்மா...ஆ என்று அலற, என்னமோ ஏதோ என்று போட்டது போட்டபடி தனலட்சுமி ஓடி வந்தாள்.

"என்னடி...என்ன ஆச்சு?"—

"பாரும்மா இந்த சரோஜிய...நா கண்ணாடி முன்னால நின்னு நாலு தரம் தலைய பின்னிகிட்டா இவளுக்கு என்னம்மா? மக்கு பினாஸ்திரி, தண்ட சோறுனு திட்டறா..."

"ஏ! விஜி...நீ மட்டும் என்ன கழுதைனு சொல்லலை?"—

"ஐயோ போய் போய்...எதுக்கோ தெரியுமா, ஏதோ வாசன்னனுதான் சொன்னேன்..."

"வேணும்னே நா புஸ்தகம் படிக்கிற இடத்துல வந்து நின்னுகிட்டு அரை மணியா கண்ட சினிமா பாட்டை எல்லாம் கரடியா கத்தி, கழுத்தை அறுக்கறாம்மா..."

"ட்ரெஸ் பண்ணிக்கிற ரூம்ல உட்கார்ந்து உன்னை யார் படிக்கச் சொன்னது? வாசலுக்கு, மொட்டை மாடிக்குப் போறது..."

"வீட்டுலதான் அறைக்கு ஒரு கண்ணாடி இருக்கே... நீதான் எங்கயாவது ஒழியறது..."

"ஏன் நீதான்..."



அக்காளும், தங்கையுமாய் குரல் எடுத்து உரக்க, சண்டை போட, 'ஷ்...ஷ்...ஏய் பெண்களா...என்ன பைத்தியக்காரத்தனம் இது?' என்று தனலட்சுமி கெஞ்ச, 'அடடாடா...கொஞ்ச நேரம் இந்த வீட்டுல நிம்மதியா இருக்க முடியாதே... நீங்க போடற சண்டைல தம்பி முழிச்சிகிட்டு தேறானு அழறான். ஏய்...விஜி...சரோஜி... வாய மூடப் போறீங்களா இல்லியா?" என்று அறைக்குள் வந்த பேபி அதட்ட, கம்மென்று ஒரு நிசப்தம் நிலவியது.

பேபி தலையைத் திருப்பி இரண்டு தங்கைகளையும் பின் அம்மாவையும் பார்த்தாள்.

"எதுக்காகம்மா இந்த இரண்டும் சண்டை கோழி மாட்டம் அடிச்சிக்கிதுங்க? ம்? ராத்திரி பூரா தம்பி தூங்கவேயில்லே...நை நைனு அழுது, என்னையும் தூங்க விடாம பண்ணிட்டான். பகல்ல சித்த கண்ண மூடலாம்னா பிசாசு மாதிரி சண்டை போட்டு அவனை எழுப்பி விட்டுடுத்துங்க...சனியங்க..."

நாலு நாளாக தொடர்ந்து நல்ல உறக்கம் இல்லாத ஆத்திரத்தில் பேபி தங்கைகளைச் சாட, சரோஜா பதிலுக்கு முறைத்தாள்.

"நீயும் உன் பிள்ளையும் தூங்கணும்னா அதுக்காக தூங்க வாய பினாஸ்திரி போட்டு ஒட்டிக்க முடியுமா? வேணும்னா அவனுக்கு காதுல பஞ்சை வைச்சிட்டு, நீயும் அடைச்சிகிட்டு தூங்கு...அத விட்டுட்டு சனியன் இனி என்று திட்ட வேணாம்...என்ன விஜி?"

"அதானே?"—

இது நாழிகை சண்டை போட்ட இரண்டு பெண்களும் ஒன்றாக சேர்ந்து கொண்டு, பெரியவளைத் தாக்க, அவசரமாய் தனலட்சுமி சமாதானம் செய்ய முன் வந்தாள்.

"வர வர...உங்களோட இதுவே ரோதனையா போயிட்டது...போங்கம்மா...இத்தனாம் பெரிய வீட்டுல தனித்தனியா படிக்க, ட்ரெஸ் பண்ணிக்க, தூங்க இடமா இல்லே! ஒருத்தர் வழியே இன்னொருத்தர் வராம போங்கம்மா..."

அரை நிமிஷம் அப்படியே நின்று அம்மாளையும், பேபியையும் முறைத்து விட்டு, சரோஜா புத்தகத்தை எடுத்துப் பிரிக்க, விஜயா கண்ணாடியிடம் பழையபடி திரும்பி நின்று கொண்டாள்.

கட்டில்மேல் பிரித்து போடப்பட்டிருந்த புடவைக் குவியலை பார்த்த தனலட்சுமி பெருமூச்சுவிட்டாள்.

"யார் வேலை இது?"

"எதும்மா?"

"இத்தனை புடவைகளைப் பிரிச்சு போட்டுக்குறது தான்..."

சரோஜா விஜயாவை நமுட்டாகப் பார்த்தாள்.

வேற யாரு... உன் கடைக்குட்டி தான்."

"எதுக்கு விஜி இப்படி களேபரம் பண்ணி இருக்கே?"

விஜயா கிட்டவந்து அம்மாளின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

"டான்ஸ் டீச்சர் ஒரு நாட்டிய நாடகம் போடப் போறாரும்மா... அதுல எனக்கு முக்கிய வேஷம் தர்றதா சொல்லி இருக்காரு. அதுக்கு கட்டறதுக்கு நல்லதா சேலைங்க இருக்கான்னு பார்த்தேன். அதாம்மா..."

பெண் மேடையில் ஆடப்போகிறாள் என்ற சேதி சந்தோஷத்தைத் தர, "சொல்லவேயில்லியே நீ" என்று கொஞ்சலாய் தனலட்சுமி அதட்டினாள்.



"டான்ஸ் க்ளாஸ்லேந்து வந்தப்போ, நீ வெளியே போயிருந்தே... அப்புறம் சொல்லலாம்னு இருந்தேன்... மறந்திட்டது... அம்மா... அம்மா... இந்த சேலை எல்லாம் அவ்வளவா நல்லதா இல்லேம்மா... மெயின் டான்ஸுக்கு உடுத்திகிட்டு ஆட நல்லதா ஒண்ணு எடுத்திடலாமா?"

"நம்ம வீட்டுல இல்லாததா விஜி... பேபி கல்யாண புடவைங்க நிறைய இருக்குதே... சரிகை கொட்டடி, ஊசி வாணம்னு..."

"அய்யய்யயோ...என் புடவைங்களை தர மாட்டேம்மா...நீ வீணா கிளப்பாதே...அழுக்காயிடும்..."

"நா பத்திரமா வைச்சிக்கறேன் பேபி..."

"அதெல்லாம் முடியாது...அத்தான் திட்டுவாரு..."

புருஷனைக் காட்டி சாக்கு சொன்னதும் விஜயா கையைக் கொட்டிக் கொண்டு சிரித்தாள்.

"அய்...அய்...இப்ப மட்டும் திடீர்னு புருஷன் நினைவு வந்திடுச்சாக்கும்? தனக்கா வேணும்னா அத்தான்னு சொல்றியே, இல்லாட்டி 'பேக்கு'ன்னு டபாய்ப்பே... அதானே!"

என்ன பதில் சொல்வது என்று புரியாமல் பேபி நிற்கையில், நினைத்துக் கொண்டு புஸ்தகத்திலிருந்து ஒரு கவரை எடுத்து சரோஜா நீட்டினாள்.

"மறந்தே போச்சு...இந்தா விஜி...நீ டான்ஸ் கிளாஸுக்குப் போயிருக்குறப்ப, உன் சினேகிதி ராணி கொடுத்தாளு ஒரு பையன் வந்து இந்த கவரை கொடுத்திட்டுப் போனான்."

வாங்கிப் பிரித்த விஜயா எகிறிக் குதித்தாள்.

"நல்ல வேலை பண்ணே நீ—இது என்னன்னு பிரிச்சு பார்க்கக் கூடாது? பாபு தியேட்டருக்குப் பகல் ஆட்டத்

துக்குப் போக நாலு பேருக்கு பாஸ் கொடுத்தனுப்பி யிருக்கா...பாபு தியேட்டர் அவங்களுதுதான் தெரிய லியே? மணி என்ன? பன்னிரெண்டே காலா? அய்யோ, நாழி ஆச்சு...கிளம்பணும்...யார் யார் வர்றீங்க?"

"என்ன படம்?"—

"தலைப் புதல்வன்"—

"சிவாஜி படமா? நா வரேன்..." என்றாள் தன லட்சுமி முதலில்.

சரோஜா அரை மனசுடன் "சரி நானும் வர்றேன்" என்றாள்.

குழந்தையை விட்டுவிட்டு போக முடியாத பேபி, நப்பாசையுடன் அம்மாவைப் பார்த்தாள்.

"நீ தம்பிய பாத்துக்கம்மா... நா போயிட்டு வரேன்."

"அ? நா படம் பார்த்து இரண்டு, மூணு மாசம் ஆவுது. உனக்கு பிள்ளை பிறந்தப்புறம் நா எங்க வெளிய போனேன். சிவாஜி படம்...நானே போயிட்டு வந்திடறேன். நாளைக்கு உங்கப்பாவ கூட்டிக்கிட்டு நீ வேணா போயிட்டு வா..."

"அம்மா...நாழி ஆச்சு...பேசிட்டு நிக்காம கிளம்பு."

"இதோ... ஒரு நிமிஷம்..."

பரபரவென்று காபி டிகாஷனுக்கு ஜலம் வைத்து, பில்டரில் ஊற்றிய தனலட்சுமி முகம் கழுவி, புடவை மாற்றிக் கொண்டாள்.

இளைய மகள்களுக்கும், தனக்கும் காபி கலந்து கொண்டாள்.

"பேபி...ஜாடில டிகாஷன் இருக்கு...மூணு மணிக்கு கலக்கி குடி...சாயங்காலம் அப்பா கடைலேந்து வந்ததும்



அவருக்கும் கொடு...அஞ்சு மணி அடிச்சதும் அரிசி களைஞ்சி வைச்சிடு. பாக்கிய நா வந்து பாத்துக்கறேன்.'

பேசிக் கொண்டே காலில் செருப்பை அணிந்தவள் அருகில் நின்ற சரோஜாவிடம் 'காது பின்னால பவுடர் வெள்ளையா தெரியுது, துடை' என்பதற்குள் 'நாழியாச் சம்மா' என்று விஜி தெருவில் நின்று அவசரப்படுத்த, வேகமாக படியில் இறங்கி நடந்தாள்.

**ஆ**று மணி சுமாருக்கு கொட்டகையிலிருந்து திரும்பி இன்னொரு கப் காபி குடித்து காலை நீட்டி உட்கார்ந்து தனலட்சுமி சிரமப் பரிகாரம் செய்துக் கொண்டிருக் கையில் மணவாளன் அருகில் வந்து அமர்ந்தார்.

"படம் எப்படி இருந்துச்சு தனம்?"

"பரவாயில்லே...வழக்கமான சிவாஜி படம் மாதிரி இல்லே..."

அரை நிமிஷம் எதுவும் பேசாமல் இருந்து விட்டு மணவாளன் மெதுவாக "தனம் என் [illegible]

"ம்?"

"இன்னிக்கு சாமிநாதன் கடைக்கு வந்திருந்தான்..."

"மாப்பிள்ளையா?"

"ம்...பேபிய எப்பக் கொண்டு [illegible] இருக்கீங்க'ன்னு நேரடியாவே கேட்டுட்டான்..."

"என்ன சொன்னீங்க?"—

"உன்னைக் கேட்காம நானா இது விஷயமா என்ன சொல்ல முடியும் தனம்? மழுப்பி அனுப்பிட்டேன்."

"வேற என்ன சொன்னாரு?"—

"குழந்தைக்கு நாலு மாசம் முடிஞ்சி அஞ்சாம் மாசம் பொறந்திடுச்சே... இனியும் ஏன் புருஷன் வீட்டுக்கு

16980
3294801

வரமைனு தெரிஞ்சலங்க எல்லாம் கேக்கறாங்களாம். பதில் சொல்ல கஷ்டமா இருக்குதாம்...''

''அப்ப, தனக்கு பெண்டாட்டி, புள்ளை வேணும்னு மாப்பிள்ளை கூப்பிடலை...பிரார்த்தியாருக்கு பயந்திட்டு தான்...''

மணவாளன் குரலை தழைத்துக் கொண்டார்.

''அப்படி விட்டேத்தியா இருக்கறவா எனக்குத் தோணலை தனம். பேபிய நாம கூட்டிட்டு வந்து வருஷம் ஒண்ணாவப் போவுது. அவன் மனசுல ஆயிரம் வேதனை இருக்கலாம்; ஆனாலும் எதையும் வெளில காட்டிக்காம வாரம் தப்பாம இரண்டு நாம் வந்து பொண்டாட்டிய பாத்திட்டு போறதோடு, மாசம் பொறந்தா இவ செலவுக் குறு கணிசமா பணம்கொண்டு தரலியா? ஏன், பிரசவத் துக்கு ஆஸ்பத்திரி செலவை அவன்தானே ஏத்துகிட்டான்? குழந்தைக்கும் புண்ணிய வாசகத்தன்னிக்கு தங்கச்சங்கிலி புதுச்சட்டை வாங்கி வரலியா? தனக்கு தெரிஞ்ச விதத்துல அவன் ஒரு புருஷனா, தகப்பனா இருக்கவேச் செய்யறான்னு நினைக்கிறேன்... நா இவ்வளவு தூரம் பேசறதை நீ தப்பா எடுத்திடுக்கக் கூடாது தனம்... யோசிச்சா உனக்கே நம்ப பொண்ணுமேல கொஞ்சம் தப்பு இருக் கறது புரியும்...''

மதியம் சாமிநாதன் கடையில் உட்கார்ந்து மனம் திறந்து பல விஷயங்களைப் பேசியதன் விளைவோ என்னமோ, அதிசயத்திலும் அதிசயமாய் அன்று மனைவி யிடம் சேர்ந்தாற்போல பத்து வரிகள் மணவாளன் பேசி விட்டார்!

தனலட்சுமி, அந்த பேச்சை கேட்கும் நிலையில் அன்று இருந்தது அவருடைய நல்ல காலம்தான்.

கொஞ்ச நாட்களாகவே வீட்டில் அவ்வப்போது பெண்கள் நடுவில் எழும் சச்சரவுகளால் பாதிக்கப்பட்



டிருந்தவளுக்கு, இன்றைக்கு கணவர் சொல்வது சரிதான் என்றே பட்டது.

கல்யாணமாகி இரண்டு வருஷங்கள் ஆகப்போகும் நிலையில் இன்னமும் பேபி பிறந்த வீட்டில் உட்கார்ந்துக் கொண்டு அனைவரையும் நாட்டாண்மை பண்ணுவதில், கீழ்கடை இரண்டு பெண்களுக்கும் வரலா வருத்தம் ஏற் படுவதை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

இந்த பேபியும் இப்படி எதற்கெடுத்தாலும் சின்னது களுக்குசரியாக விதண்டாவாதம் பண்ணவேண்டாம்தான்.

யார் அவளுக்கு புத்தி சொல்வது?

சொன்னால்தான் கேட்பாளா?

பிள்ளை உண்டாயிருந்தபோது, அவள் ஆனாலும் தரையில் கால் வைக்கமாட்டேன் என்று சொகுசாய் இருந்து படுத்தி வைத்தது உண்மை.

அப்போதுதான் சரோஜா, விஜயாவிடம் முதன்முதலில் முணு முணுப்புகள் பிறந்தன.

—கையிலே கொண்டு எதையும் தாங்க கொடுக்கணு மாம். பக்கத்துல இருக்குற பொருளைகூட எட்டி எடுக்க மாட்டாளாம்... ரொம்ப படுத்தறாம்மா... நாங்க என்ன இவளுக்கு வேலைக்காரியா? கல்யாணமானதுலேந்து தன்னை மாதிரி இல்லேன்ற திமிர் பேபிக்கு வந்திடுச்சி; நீயும் சேர்ந்துகிட்டு ரொம்பத்தான் இடம் கொடுக்கறே... என்று போக வர இளைய பெண்கள் முக்கியமாய் விஜயா புகார் சொல்ல முற்பட்டதும், அவர்கள் சொல்வதில் நியாயம் இருப்பதாகத் தோன்றினாலும் கண்டிக்க மனம் இல்லாமல் தனலட்சுமி தழைத்து போனாள்.

பிரசவம் ஆனதும் பேபியின் அதிகாரம் இன்னும் அதி கரிக்க, இனியும் தாங்கள் வாயை மூடிக்கொண்டிருக்க

மாட்டோம் என்ற நிறுவில் சரோஜாவும், விஜயாவும் பதிலுக்கு வாயாட ஆரம்பித்தார்கள்.

இப்போதெல்லாம் நாளும் சண்டை; உப்பு பெறாத சுண்டைக்காய் விஷயத்துக்கும் வாக்குவாதம்...

ஒரோரு சமயம் பேபி குழந்தையுடன் புருஷன் வீட்டுக்குப் போய்விட்டால்கூட தேவலை என்றே தோன்றுகிறது.

ஆனாலும்...?

இத்தனை வருஷங்களாக அதிக செல்லம் கொடுத்து வளர்த்துவிட்ட பெண்களை கண்டிக்கவோ, பிரியவோ மனம் இல்லாமல், என்ன செய்வது என்ற குழப்பத்தில் தனலட்சுமி பெருமூச்சுவிட்டாள். கணவரை நிமிர்ந்து பார்த்து ஆயுளில் முதல்முறையாக "நீங்க என்ன சொல்றீங்க?" என்றாள் மெல்லிய குரலில்.

"ஜோசியரைக் கேட்டு நல்ல நாள் பார்த்து புருஷன் வீட்டுல விட்டுடறதுதான் நமக்கும் பெருமை, மாப்பிள்ளைக்கும் சந்தோஷம்."

இதற்குப் பதில் சொல்லாமல் தனலட்சுமி சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருக்க, அவளை குஷிப்படுத்தும் எண்ணத்துடன் மணவாளன் பேச்சை மாற்றினார்.

"முக்கியமான விஷயத்தைவிட்டுட்டு என்னென்னமோ சொல்லிட்டு இருக்கனே தனம்; நம்ம ராமசாமி இன்னிக்கு எனக்கு போன் பண்ணான்..."

"எந்த ராமசாமி..."

"ஜவுளி கடை வைச்சிருக்கானே என் மாமா பிள்ளை அவன் தான்."

"என்ன விஷயம்..."

"நல்ல விஷயம் தனம்... அவன் தம்பி அமெரிக்காவிலே படிக்கிறவன் இன்னும் இரண்டு மாசத்துல இந்தியாக்கு



வரானாம்; நல்ல பொண்ணா இருந்தா சொல்லு. கல்யாணத்தைப் பண்ணி அனுப்பிடுவோம்'ன்னான். எனக்கு உடனே நம்ப சரோஜி ஞாபகம்தான் வந்துச்சு... என்ஜினியர்... மாசம் இரண்டாயிரம் டாலர், அதாவது பதினெட்டாயிரம் சம்பளம், ராஜபோக வாழ்க்கை... என்ன சொல்றே?"

இது நாழிகை இருந்த ஆயாசமெல்லாம் நீங்கி தனலட்சுமி நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"உசத்தி இடங்க, விட்டுடக்கூடாது. எப்படியாவது வளைச்சிடணும். நம்ப சரோஜிக்கு என்ன? புறா மாதிரி அழகு. ஏகத்துக்கு புத்தி...சீர் செனத்தி அதிகமா கேட்டால் கண்ணாகூட பரவாயில்லே... முனைஞ்சி முடிச்சிடுவோம்."

"நீ சரினு சொல்லிட்டே இல்லே.. இனி விடுவேனா... ராமசாமிய போய் ஒரு நடை பார்த்து என்ன ஏதுனு விசாரிச்சிடறேன்."

"முதல்ல அந்த செய்யுங்க..."

"ராமசாமி கிராமத்துக்குப் போயிருந்தானாம். தம்பி ஆளவந்தாரைப் பார்த்தாராம். அவனோட மூத்த மக அபிராமி கண்ணுக்கு ரதியா இருக்காளாம். இந்த வருஷம் ஸ்கூல்ல பர்ஸ்ட்டா தேறி இருக்காளாம். அடக்கம், சமர்த்துனு ஒரேதாறு புகழ்ந்தான். ஒருவேளை தன் தம்பிக்கு அவளை கேக்கலாம்னு நினைக்கறானோ என்னவோ. அதான் கொஞ்சம் கலக்கமா இருக்கு...?

தனலட்சுமி கழுத்தை நொடித்தாள்...

"அமெரிக்காவில இருக்குற பையன் அந்த கிராமத்து அபிராமிய ஒருநாளும் கட்டிக்கமாட்டான். நம்ப சரோஜி நிறத்துக்குமுன்னால அவ அட்டைக்கரி.எதுக்கும் மசமசனு நிக்காம, நாளைக்கே காரியத்துல இறங்குங்க...நா உள்ளே போறேன். ராத்திரி சமையலை இன்னும் கவனிக்கலே யில்லே..."

சமையல்கட்டில் தனலட்சுமி வேலையாய் இருந்த போது சரோஜா பதட்டத்துடன் வந்தாள்.

''அம்மா... இங்க பாரு...''

''என்ன தங்கம்?''

''மத்தியானம் சினிமாவுக்குப் புறப்படறப்போ காது பின்னால பவுடர் இருக்கு துடைச்சிக்கனு சொன்னே இல்லே?''

''ஆமா...''

''இப்ப விழியும் காது பின்னால சோப்பு நுரை அப்படியே இருக்குனு சொல்றா... துடைச்சும் போகலை. இது என்ன பாரு...''

விளக்கடியில் நகர்ந்து நின்றுகொண்டே தனலட்சுமி மகளை அருகில் அழைத்தாள். தலைமுடியை ஒரு பக்கமாக ஒதுக்கிவிட்டு, ஊன்றி பார்த்தாள்.

வெள்ளையாய், ஐந்து பைசா அகலத்துக்கு...

என்னது இது?

அழுந்த தேய்த்தும் போகாமல் இருக்க, அடிவயிற்றில் மெதுவாக பயம் பிராண்டத் துவங்க ''என்னங்க... இங்க வாங்களேன்...'' என்று கணவரை அழைத்தாள் பதட்டமாய்.

''என்ன தனம்?''—

''இதப்பாருங்க...''

''என்னது இது? ஏதாச்சும் புண் கின் வந்ததா?''

''ஏன்டி?''

''ம்ஹூம் இல்லம்மா...''

''அப்புறம்... இது எப்படி வந்தது?''



''சரோஜி... உடம்புல வேற எங்கயாவது வெள்ளையா தேமல் மாதிரி இருக்கா?''—

''இல்லியேம்மா...''

நம்பிக்கை படாமல், அவளை இழுக்காத குறையாக தனலட்சுமி முன் அறைக்கு அழைத்துப் போனாள். கதவை தாள் போட்டாள்.

''துணிய அவுடி'' என்றாள்.

தயங்கி நின்றவளை அதட்டி புடவை, ரவிக்கையை களையச் செய்தாள்.

சுற்றி வந்து அழுத்தமாய் பார்த்தாள்.

முன்னால் இல்லை.

துடைகள், கால்களில்... இல்லை.

முதுகில்...

அ... அது... என்ன?

தோள்பட்டைக்கு நேர் கீழாக? வெள்ளையாய்?

அப்புறம் இடுப்புபிரதேசத்தில் நாலைந்து இடங்களில் மிளகு சைஸில் வெள்ளைப் புள்ளிகளாய்...

கடவுளே...

திடுமென கால் இரண்டும் தொய்ந்து போன மாதிரி தனலட்சுமி கட்டில்மேல் உட்கார்ந்துகொண்டாள்.

அப்பாவின் கூடப்பிறந்த அத்தை ஒருவளுக்கு முகம், உடம்பெல்லாம் இப்படி வெள்ளைப் பரவிப் போனதும், அவள் வெளியில் நடமாட கூசிக்கொண்டு சமையல் அறையில் ஒண்டிக் கிடந்ததும், ஊர் பூராவும் ''தாசத்துக்கு வெண் குஷ்டமாமே'' என்று வம்பு பேசியதும் தபதப வென்று எங்கிருந்தோ வந்து நினைவில் முட்டின...

வெண் குஷ்டம்...

வெண் குஷ்டம்...

என் சரோஜிக்கா?

பதினெட்டு வயசுப் பெண்ணுக்கா?

—உங்கப்பா வம்சத்துல இந்த வியாதி உண்டாம். நல்ல வேளையா உனக்கு இது வரலை. ஆனாலும் நா வயத்துல இன்னும் நெருப்பை கட்டிக்கிட்டுதான் இருக்கேன்—என்று சாகும் வரை அம்மா புலம்பிய புலம்பல்.

ஒரு தலைமுறை விட்டு இப்போது இரண்டாவது தலைமுறையை தாக்கி விட்டதா?

பல வருஷங்களாக பதுங்கி கிடந்ததில் அவசரம் தாளாமல் சின்னப் பெண் என்றும் பார்க்காமல் தன் கை வரிசையைக் காட்டி விட்டதா?

தனலட்சுமி விக்கித்துப் போனாள்,

கொஞ்சம் சுய நினைவு வந்ததும் "ஐயோ மோசம் போயிட்டமே...என்னங்க, நாம மோசம்போயிட்டமே..." என்று முகத்தில் அறைந்துக் கொண்டு உரக்க அழத் தொடங்கினாள்.

அடுத்து வந்த இரண்டு வருஷங்களிலும் சரோஜாவுக்கு வந்துவிட்ட நோயுடன் போராடியதில் மணவாளனும், தனலட்சுமியும் ஓய்ந்துதான் போனார்கள்.

ஆரம்பத்தில் எவருக்கும் தெரியாமல் சிகிச்சை செய்ய வேண்டி, ஒரு கத்துக்குட்டி வைத்தியரிடம் சென்று அவர் 'ஒண்ணுமில்லே, வெறும் வைட்டமின் டிபிஷியன்ஸிதான் காரணம்' என்று அலட்சியமாகக்கூறி, ஊசிகள் போட்டும் எந்த மாற்றமும் இல்லாமல் இருக்க, யாரோ சொன்னார்கள் என்று சித்த வைத்தியத்தைச் செய்தார்கள். பஸ்மத்தை தேனில் குழைத்து உள்ளுக்கு சாப்பிட



வேண்டும்; களிம்பை பூசிக்கொண்டு தினம் பத்து நிமிஷங்கள் வெயிலில் உட்கார வேண்டும் என்று அவர் சொன்னதை அக்கறையுடன் கடைபிடித்தும், மாசம் இரண்டு தாண்டுவதற்குள் புள்ளிகளாக இருந்த வெண்மை சரசரவென்று கோலம் போட்டுக் கொண்டு பின்பக்கம் பூராவும் பரவியதில், இனியும் தாமதிப்பது அசட்டுத்தனம் என்று ஊரின் பெரிய தோல் வைத்திய நிபுணரிடம் அழைத்துச் சென்றார்கள்.

அவரிடம் கிட்டத்தட்ட ஆறுமாசம் போல சிகிச்சை நடந்தது.

இதற்கும் சரோஜாவின் வியாதி பெப்பே காட்டின பின், என்ன செய்வேன், ஏது செய்வேன் என்ற நிதானத்தை இழந்தவளாக கண்டதையும், கேட்டதையும் செய்ய முற்பட்டாள் தனலட்சுமி.

எதிர்வீட்டு பாட்டி சொன்னாள் என்று அடுக்கு செம்பருத்திகளை பறித்து வந்து, அரைத்து விழுதாக்கி சரோஜா உடம்பு பூராவும் தடவி ஊறி குளிக்க வைத்தாள்.

மருதாணி நல்லது—அதற்கு வெண்மையை மாற்றும் குணம் உண்டு என்று கேள்விப்பட்டு பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அதை அரைத்து மகளுக்கு இட்டு விட்டாள்.

வைத்தீஸ்வரன் கோவிலுக்கு உப்பும் மிளகும் வாங்கிப் போடுவதாக வேண்டிக் கொண்டால் கைமேல் பலன் என்று நாலாவது வீட்டு அம்மணி கூற, அதையும் நிறைவேற்றினாள்.

எல்லாவற்றிற்கும் மேலாக எத்தை தின்னால் பித்தம் தெளியும் என்ற பதைப்பில் வாசலில் கீரைக்காரி சொன்னாள் என்று பதினைந்து நாட்களுக்கு தினமும் அருகம்புல்லையும், மிளகையும் அரைத்து வெறும்

வயிற்றில் பெண்ணைக் குடிக்க வைத்து, குடல் வெந்து போய் அதற்கான தனியாக சிகிச்சை எடுத்தானே. அந்த வேதனையைக் கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

என்ன செய்து என்ன?

யாருக்கும் அடங்காத பிடாரியாக திருதிமுவென்று கை, மார்பு, முகம், பின் இடுப்பு, தொடைகளில் வெண்மை திட்டு திட்டாக பரவிப் போக, சதா சர்வகாலம் கண்ணீரும் சிவந்த விழிகளுமாய் சரோஜா நிற்பதுதானே நிஜமாயிற்று?

எதிர்பாராமல் வியாதியால் தாக்கப்பட்டு, தான் பெருமையுடன் போற்றி வந்த அழகு சிதைந்து போக, சிரிப்பு என்றால் என்ன என்பதை அடியோடு சரோஜா மறந்து போனாள்.

எந்நேரமும் சிடுசிடுப்புதான். ஆங்காரம்தான். யாரைக் கண்டாலும் சண்டைதான்

ரஜாத்தி மாதிரி மகள் இருக்கிறாள். படிப்பு, புத்திக்கும் குறைவில்லை. அமெரிக்காவில் இருக்கும் ராமசாமி தம்பிக்கு எப்படியாவது இவளை முடித்து விட வேண்டும் என்று கோட்டை கட்டியது நடக்காமல் போனதோடு, தம்பி ஆளவந்தார் மகள் அபிராமிக்கு அந்த வரன் தாலி கட்டி அமெரிக்காவுக்கு குடித்தனம் பண்ண அழைத்துச் சென்று விட்டது இன்னும் பெரிய இடியாக இடித்தது.

கிராமத்தில் வளர்ந்த அபிராமி...

அதிக உபயமில்லாமல், மாநிறமாய் இரண்டு வார்த்தை சேர்ந்தாற் போல பேசத் தயங்கும் அபிராமி.

அவளுக்கு வந்த அதிருஷ்டத்தைப் பாரேன்.



இரவு நேரங்களில் புருஷனும், மனைவியும் மாய்ந்து போனார்கள். பெருமூச்சு விட்டுவிட்டு அதிலேயே தேய்ந்து போனார்கள்.

சரோஜா விஷயம்தான் இப்படி என்றால் பேய் சமாசாரம் ஒரு பக்கமும், விஜயா சேதி இன்னொரு பக்கமும் அவர்களை வேதனைப்படுத்தின.

டான்ஸ் டிராமாவில் முதலில் நடிக்க சம்மதித்து விட்டு, பின், சரோஜாவின் வியாதி பிடிபட்டு தெருக்காரர்கள் கசமுசாவென்று பின்னால் பேசும் அளவுக்கு வளர்ந்து போனதும், கணவரிடம் ஒருநாள் தனலட்சுமியும் இது குறித்து பேசினாள்.

''இன்னும் ஒரு மாசத்துல நாட்டிய நாடகம் அரங்கேறணுமாம்...ட்ரெஸ் நகை வாங்குறது விஜி ரோதனை பண்றாங்க.''

மணவாளன் உடனே பதில் கூறவில்லை. யோசனை செய்து, மீசையை தடவியபடி பேசினார்.

''உன்கிட்ட தானே இது சம்பந்தமா பேசணும்னு இருந்தேன் தனம்...ஏற்கனவே நம்ம சரோஜியைப் பத்தி கன்னா பின்னானு தெரிஞ்சவங்க பேசறாங்க...இவளுக்கு எப்ப குணமாகி, எப்ப ஒருவன்கிட்ட ஒப்படைக்கப் போறோம்னு புரியலை...இது இப்படி இருக்கறப்போ, சின்னவளாவது ஒழுங்கா இருந்தா தேவலை. அவளுக்கும் வயசு பதினாறு பூர்த்தி ஆயிடுச்சி...படிப்பு இல்லே... இதோட டான்ஸ் அது, இதுனு ஆம்பிளைங்களோட மேடைல ஆட விடறது நல்லதுனு எனக்குத் தோணலை. பிள்ளைங்களோட எதிர்காலத்தை நினைச்சி பாக்குறப்போ, இந்த ஆட்டம் பாட்டத்தை இனிமே நிறுத்திடலாம்னே தோணுது...நல்ல இடத்துல சம்பந்தம் வரணும்னா, நாலையும் யோசிக்கணும்.''

அவ்வளவாக விருப்பம் இல்லாவிடினும், ஊர் வாயை அடைக்கவாவது அந்த முடிவை தனலட்சுமியும் ஆதரித்தாள்.

மறுநாள் தங்கள் விருப்பத்தை விஜயாவிடம் தெரிவிக்க, அவள் சாமி வந்த மாதிரி ஆடி, அதை எதிர்த்தாள்.

"எப்படி, இந்த முடிவுக்கு நீங்களா வருவீங்க, முன்னே சரின்னு சொல்லிட்டு, இப்ப உங்க இஷ்டத்துக்கு வேணாம்னா, இது நியாயமா? எங்க மாஸ்டர் என்னைப் பத்தி என்ன நினைப்பாரு? மத்த சிநேகிதங்க கிச்சிறு சிரிக்க மாட்டாங்களா? மாட்டேன், உங்க முடிவுக்கு கட்டுப்பட மாட்டேன். எனக்கு டான்ஸ்தான் மூச்சு...நா கட்டாயம் ஆடியே தீருவேன்..."

குரல் எடுத்து அலறியவளை சமாதானம் செய்யத் தெரியாமல் தனலட்சுமி தவித்தாள்.

"இங்க பாரும்மா...ராஜாத்தி...என் தங்கமில்லே, உன் நல்லதுக்குதாம்மா நாங்க சொல்றோம். ஏற்கனவே சரோஜிக்கு இப்படி உடம்புக்கு வந்துட்டதுல, அவளை எப்படி கரை எத்தறதுனு முழிச்சிட்டு இருக்கோம். நீயும் கண்டபடி நடந்து, பேரைக் கெடுத்துக்கிட்டு ஒரு பிரச்சனை ஆயிடாதே விஜி...சொன்னா கேளும்மா..."

"மாட்டேன் சரோஜிக்கு உடம்புக்கு வந்தா அது அவ தலையெழுத்து... அதுக்காக நா என் விருப்பத்தை விட்டுக் கொடுக்கணுமா? எனக்கு கல்யாணமே வேணாம். ஆயுசு பூரா, நாட்டியமாடிகிட்டு இருந்தா போதும். நா இந்த நாடகத்துல ஆடியே தீருவேன். இத்தனை நாள் ப்ராக்டிஸ் பண்ணிட்டு இப்ப சமயத்துல காலை வாரி விடறது சரியில்லே..."

பெண் பேச்சுக்கு எதிராக பேசி பழக்கமில்லாத தனலட்சுமி அந்த கண்ணீரையும், கதறலையும் பார்த்து, கேட்டு பரிதவித்து போனாள்.



புருஷனிடம் அவளுக்கு வக்காலத்து வாங்கினாள்

"இந்த முடிவு சரினு எனக்கு தோணலை" என்று மணவாளன் சொல்வதை காதில் வாங்காமல் "போனாப் போவுது விஜி... நீ சொல்ற மாதிரி இத்தனை நாள் ப்ராக்டிஸ் பண்ணிட்டு, இப்ப விடும்னு மாட்டேன்னு சொல்றது நியாயம் இல்லதான். இந்த ஒருமுறை மட்டும் ஆடிடு. அப்புறம் உனக்கு பதிலா யாரையாவது தயார் பண்ணிடச் சொல்லு" என்று பச்சைக் கொடி காட்டினாள்.

ஒரு தரம் என்றது ஆறு தரமாக மாறி, அந்த நாட்டிய நாடகத்தை கைவிட்டு விட்டு இன்னொன்றை மாஸ்டர் தயாரிக்க முற்பட்டதும் தான் விஜயா மனசே இல்லாமல் நாட்டியத்தை நிறுத்தினாள்.

ஆனால் தான் பெரிய நாட்டிய தாரகையாக வரவேண்டியவள், தன்னை அநியாயமாக பெற்றோர் வஞ்சித்து விட்டனர் என்ற ஆத்திரம் காரணமாக எப்போதும் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டாள். வீட்டு வேலை, இதர பொறுப்புகளில் மறந்தும் பங்கெடுக்க மறுத்தாள். இவள் நடத்தை குறித்து அக்காக்கள் ஏதாவது கூற முற்பட்டால் இல்ல சொல்லிதான் தாக்குவது என்று மரியாதை இல்லாமல் சண்டை போட மல்லுக்கு நின்றாள்.

அடுத்து பேபி...

திருமணமான இந்த நாலு வருஷமாய் நித்திய பிரச்சனையாகிவிட்ட பேபி...

ஒருநாள் புருஷனுடன் குடித்தனம் பண்ணினால் இரண்டு நாட்கள் பிள்ளையுடன் பிறந்த வீட்டுக்கு வந்து விடும் பேபி...

புருஷனைப் பற்றி சதா குறைதான், புகார் தான்.

"அம்பிளையா அவரு... தாலி கட்டினவளை சந்தோஷமா வைச்சிக்கத் தெரியாதவருக்கு கல்யாணம் எதுக்கு?" என்பாள்.

"இவரோட வாழறதுக்கு பதிலா, ஒரு நாயோட குடும்பம் நடத்தலாம். ஜடம் ஜடம்..." என்பாள்.

'ஒரு பாட்டுக் கச்சேரிக்கு போனோம். ஒரு எக்ஸிபிஷனுக்குப் போனோம். மத்தபடி ஒண்ணுமில்லே. சரியான கஞ்சன் இவரண்ட லோல் படணும்னு எனக்கென்ன தலை எழுத்தா?' என்பாள்.

"ஐயோ பாவம், இவளை நாமும் விரட்டினால் எங்குப் போவாள் என்ற ஆதங்கம் எழுந்தால் தனலட்சுமி அத்தனையும் கேட்டுக்கொண்டு பேசாமல் இருப்பாள். மனசு ஒரு நிலையில் இல்லாவிட்டால் அலுப்புடன் "பொம்பளைன்னா நாலையும் அனுசரிச்சுட்டு போகத் தெரியணும்... சும்மா ஏன் குறை சொல்லுறே?" என்று சிடுசிடுப்பாள்.

இப்படி புத்தி சொல்லிவிட்டால் அன்றைக்கெல்லாம் பேபியின் அரற்றலும், விசும்பலும் அதிகமாக இருக்கும்.

கூப்பிட்டாலும் சாப்பிட வரமாட்டாள். அறைக் கதவை சாத்திக்கொண்டு அழுது தீர்ப்பாள்.

இவள் வந்த இரண்டாம் நாள் சாமிநாதன் வீட்டு வாசப்படி ஏறி வந்து 'வா பப்பி' என்று அழைப்பான்.

விருப்பம் இருந்தால் அந்த அழைப்பை மதித்து போவாள். இல்லாவிட்டால் மற்றவர் நடுவில் அவன் மானம் போகும்படி தையாண்டி பண்ணுவாள்.

இரண்டு வருஷங்களாக மாமூலாய் நடக்கும் இந்த கூத்து, விபரீதமான ஒரு திருப்பத்தை அடைந்தது அந்த சனிக்கிழமைதான்.

மாலை ஏழு மணி இருக்கும்.



விளக்கை ஏற்றிவிட்டு தனலட்சுமி முன் அறையில் எட்டிப் பார்த்தாள்.

புத்தகம் ஒன்றை படித்துக்கொண்டிருந்த சரோஜா இவளைக் கண்டதும் கருக்கென்று தைத்தாள்.

"என்ன பாக்கறே... உன் மகனோட அழகையா!"—

ஆமை தலையை இழுத்துக் கொள்வதைப்போல நகர்ந்து அவள் வாசலுக்குப் போனாள்.

விஜயா வீட்டில் இல்லை. சிநேகிதி வீட்டுக்குப் போயிருந்தாள்.

இப்போதெல்லாம் அடிக்கடி சிநேகிதி வீட்டுக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டு விஜயா இருட்டி வெகு நேரம் கழித்து வருகிறாள்; ஏதாவது கேட்டால் 'நா ஒண்ணும் சின்ன பாப்பா இல்லே என்னை யாரும் நூறு கேள்வி கேட்க வேணாம்' என்று கோபமாக பதில் சொல்கிறாள்.

சல்லரி... தாயே...

வாசல் வராந்தாவில் புருஷனுக்குப் பக்கத்தில் தனலட்சுமி உட்கார்ந்தாள்.

அடிக்கடி தெய்வத்தின் பெயரை வாய் முணுமுணுப்பது அவளுக்கே வியப்பாக இருந்தது.

புருஷனும், மனைவியும் எதுவும் பேச பிடிக்காமல் அமர்ந்திருக்கையில் வாசலில் டாக்ஸி ஒன்று வந்து நின்றது.

பேபி, பேரன் முகுந்தன்.

"பெட்டி, மத்த சாமான்களை இறக்கி வைச்சிட்டு நீங்க போங்க ட்ரைவர்..."

பெட்டி... சாமான்களா?

அப்படியென்றால்?

விழித்துக்கொண்டு இவர்கள் நிற்க, பேபி அசாத்திய கோபத்துடன் அருகில் வந்தாள்.

சிவந்திருந்த கண்களில் ஜலம் பெருக்கெடுக்க, "இனி சத்தியமா உன் முகத்துல விழிக்கறதில்லேனு சொல்லிட்டு வந்திட்டேன். அவன் மனுஷனே இல்லேப்பா... அவனோட திரும்ப வாழ நினைச்சா என்னை செருப்பால தான் அடிக்கணும்'' என, கடவுளே—இது என்ன புது கஷ்டம் என்று மணவாளனும், தனலட்சுமியும் அதிர்ந்து போனார்கள்.

"இங்க பாரு பேபி... விஷயம் என்னனு சொல்லறதை விட்டுட்டு இப்படி பிழிய பிழிய அழுதா என்னன்னு புரிஞ்சிக்கறது? ம்?"—

"என்னை விட்டுடுங்க... எனக்கு மனசே சரியில்லே..."

"சொல்லும்மா... என்ன நடந்திச்சு?"

"இன்னும் என்ன நடக்கணும்? மொத்தத்தில அந்த மனுஷன் ஒரு மிருகம். அதான் நா சொல்லுவேன்..."

வழக்கமாக மகள் கூறும் புகார்களில் இதுவும் ஒன்று தான் என்பதால் தனலட்சுமி மௌனமாயிருந்தாள்.

"நாலைஞ்சி நாளாவே அது குணங்கெட்டுதான் நடந்துகிட்டுது. தன் இஷ்டத்துக்கு வர்றது; கேட்டா எதுவும் பேசாம படுக்கறதுனு ரொம்பத்தான் திமிரா இருந்தது. எனக்கும் பொறுக்கலை. நீ பத்தடி பாஞ்சா நான் இருபதடி பாயமாட்டேனானு, நேற்றும் எனக்கும் பிள்ளைக்கும் மட்டும் சமையல் செஞ்சிட்டேன். அதை ஏன்னு கேட்காம இருந்தேன். இத்தனைக்கும் அது அசைஞ்சி கொடுக்கலை. காலைல எழுந்து குளிச்சிட்டு வெளில போனா, ராத்திரி பத்தாகும் திரும்ப. எங்க சாப்பிடுமோ, என்ன பண்ணுமோ தெரியாது. 'நீ சாப்பிட்டியா, என்ன பண்ணே?'னு ஒரு வார்த்தை! ஒரு எழவும்



கிடையாது. முந்தா நாளு ராத்திரி ஆட்டத்துக்கு கோமதி அக்காவோட வீட்டை பூட்டிகிட்டு போயிட்டு, ஒரு மணிக்கு வர்றேன். இது மாடிப்படிலே உட்கார்ந்து கிட்டு முறைத்தது. நா அதை லட்சியம் பண்ணலை. இன்னிக்கு எதிர் வீட்டு ராஜி 'முந்தானை முடிச்சு' முதல் ஷோவுக்கு போயிட்டு வரலாம் வா—னு கூப்பிட்டா. சசினு புள்ளையை இத் போர்ஷன்ல விட்டுட்டு நா போனேன். அதிசயமா இது ஆபீஸ்லேந்து சீக்கிரம் வீடு திரும்பியிருக்கு...

ஆறு மணிக்கு நா பூட்டை திறந்துகிட்டு உள்ளார நுழையறேன். பின்னால பிள்ளையோட வந்து என்ன ஏதுனு கேக்காம பளார் பளார்னு அறைஞ்சிது. 'பாவி கொல்றானே'னு நா கத்த, கேட்டுட்டு, பக்கத்து வீட்டுக் காரங்க ஓடி வந்தாங்க. 'இவ பொம்பளையா? நானும் பொறுத்து பொறுத்து பாக்கறேன்... முடியலை... நினைக்கும் சினிமா பார்க்காட்டி சோறு ஜீரிக்காதா? பிள்ளைய கவனிக்கக்கூட நேரம் இல்லாத இவ இருந்தா என்ன? செத்தா என்ன?'னு மறுபடி அடிச்சிது. எனக்கும் கோபம் வந்திடுச்சி... "நிறுத்துடா. பொம்பளைய கை நீட்டி அடிக்க உனக்கு வெட்கமாயில்லே? தாலி கட்டின தோஷத்துக்காக உன்னோட நாலு வருஷம் சேர்ந்து வாழ்ந்து ஒரு பிள்ளையும் பெத்துகிட்டேன். இனியும் உன்னை புருஷனா மதிக்க வாழ்ந்தா நா சொரணை கெட்டவனு அர்த்தம். நீயும் வேணாம் நீ கட்டின தாலியும் வேணாம். இந்தா எடுத்துக்க. சத்தியமா உன்னோட நா இனியும் வாழ மாட்டேன்'னு சொல்லி அது கட்டின தாலிய கழட்டி எறிஞ்சிட்டு என் புடவைங்க, நகைகளை எடுத்துகிட்டு பிள்ளையோட வந்திட்டேன். அப்பா, நாளைக்கு நீங்க அங்க போயி, கல்யாணத்துக்குக் கொடுத்த பாத்திரம் பண்டம், சாமான்களை எடுத்திட்டு வந்திடுங்க... நாமளும் ரோஷக்காரங்கதான்றதை அந்த ஜென்மத்துக்கு உணர்த்தணும்..."

அழுகை நின்றுபோய் ஆங்காரத்துடன் மூச்சுவிடாமல் பேபி பேச, இந்த அளவுக்கு விஷயம் முத்திப் போகும் என்று எதிர்பார்க்காதவர்களாய் மணவாளனும் தன லட்சுமியும் விக்கித்து நின்றார்கள்.

அடைத்துப்போன குரலை தேடிப்பிடித்து "எ...என்ன பேபி சொல்றே? நா... நாலிவ கழட்டி கொடுத்திட்டு வந் திட்டியா?" என்று மணவாளன் வினவியபோது அவர் எந்த நிமிஷமும் அழுதுவிடுவார் என்று தோன்றியது.

"கழட்டிக் கொடுக்கலை... கழட்டி அது மூஞ்சிலே எறிஞ்சேன்..."

"நா... நாலு பேர் முன்னாலயா?"—

"நாலு இல்லே... எழெட்டு பேர் இருந்தாங்க."

தான் செய்தது ரொம்ப சரி என்கிற உணர்வோடு பேபி பேச, பாய்ந்து அவள் முடியைப் பிடித்து உலுக்கி, நாலு குத்து விடவேண்டும் போல வெறி எழ, அங்கே நின்றால் தன்னையும் மீறி ஏதாவது செய்துவிடுவோம் என்ற பயத்தில் அவசரமாய் வாசல் பக்கம் நகர்ந்தார்.

இத்தனை பேச்சையும் கேட்டுக்கொண்டு அந்த அறையிலேயே அமர்ந்திருந்த மற்ற இரு பெண்களையும் தனலட்சுமி பதட்டத்துடன் ஏறிட்டாள்.

முகத்தில் எந்த ஒரு உணர்ச்சியும் இல்லாமல் சரோஜா வும் எவள் எக்கேடு கெட்டு போனால் எனக்கென்ன என்ற அலட்சியத்துடன் விஜயாவும் இருப்பதை புரிந்துகொள்ள முடிய 'ஐயோ இந்தப் பெண்களை வைத்துக்கொண்டு தான் என்னப் பண்ணப் போகிறேன்' என்று பயம் முதல் முறையாக நெஞ்சைத் தாக்கியது.

வெடித்துக்கொண்டு எழுந்த அழுகையை, புடவைத் தலைப்பை வாயில் திணித்து அடக்க முயற்சித்து அவள் தோற்றுப் போனாள்.



"இப்படியே உட்கார்ந்திருந்தா? ஒரு தீர்மானத்துக்கு வரவேணாம்?"

மணவாளன் எரிச்சலுடன் மனைவியை ஒரு தரம் முறைத்துப் பார்த்துவிட்டு பார்வையைத் திருப்பிக் கொண்டார்.

"அட, நா ஒருத்தி கேக்கறது காதுல விழலை?"

"விழுதுதான். ஆனா இத்தனை வருஷமா எல்லாத் துக்கு முடிவு எடுக்கத் தெரிஞ்ச நீ இருக்கிறபோ இன்னிக்கு மட்டும் நா என்ன செய்து கிழிச்சிடப் போறேன்னுதான் சும்மா இருக்கேன்..."

"ஏன் இப்படி காட்டமா பேசறீங்க?"—

"அப்படித்தான் பேசுவேன். புடிக்கலைன்னா என் கிட்ட பேச்சு வைச்சுக்காதே..."

கிட்டத்தட்ட ஒரு வாரமாய், பேபி புருஷனிடம் சண்டை போட்டுக்கொண்டு வந்துவிட்ட இந்த ஒரு வார மாக, மணவாளனின் பேச்சு, நடத்தையில் ஒரு மாற்றம் இருக்கவே செய்கிறது.

அடங்கி நடந்தது போதும், இனியாவது தைரியமாய் பேசிவிடுவோம் என்று துணிந்துவிட்டாரோ!

அல்லது, அடுத்தடுத்து உண்டான கஷ்டங்களால் மனைவி முறுக்கு விட்டுப் போயிருப்பதை உணர முடிந்தவ ராய், அவளைக் குட்ட இதுதான் சந்தர்ப்பம் என்று சந்தோஷப்படுகிறாரோ?

ஏதோ ஒன்று.

மொத்தத்தில் மணவாளன் தனலட்சுமி நடுவில் முன்பிருந்த அன்யோன்யம் இப்போது இல்லை என்பதும்,

புருஷன் மனைவி இதமாக ஒரு வார்த்தை பேசிக் கொள்வது அபூர்வமாகிவிட்டது என்பதுதான் நிஜம்.

"எதுக்கும் இப்படி எடக்கா பேசி பொறுப்பத் தட்டிக் கழிச்சிடலாம்னு பாக்கறீங்களா?"

"இப்ப நா என்ன செய்யலைனு இத்தனை புகார் பண்ணுறே?"

"என்ன செஞ்சிட்டீங்க? மொதல்ல அத சொல்லுங்க... மூத்த மக புருஷன் வேணாம்னு தாலிய கழட்டி எறிஞ்சிட்டு வந்திருக்கா; வெளில விஷயம் தெரிஞ்சு ஊர் சிரிக்கறதுக்கு முன்னால அவளுக்கு நல்ல வார்த்தை சொல்லுவோம். மாப்பிள்ளையோட சேர்த்து வைப்போம்னு ஒரு அப்பனுக்கு பதைக்க வேணாம்? ஆம்பிளையா லட்சணமா அதட்டி உருட்டியாவது அவளை அவரோடு வாழ வழி பண்ண வேணாம்?"

"இத்தனை வருஷமா நீதானே அத்தனை நல்லது கெட்டதையும் செஞ்சே? இப்பவும் நீயே செய்யறது! என் இடும் விட்டு என் ஞாபகம்?"

தனலட்சுமி ஒருவித கையாலாகாத தனத்துடன் புருஷனை ஏறிட்டாள்.

"இப்ப எதுக்காக நீங்களும் சேர்ந்து என்னை வதைக்கறீங்க?"

"நான் வதைக்கலை தனம். நீ அன்னிக்கு ஆடின ஆட்டம்தான் இன்னிக்கு பிரச்சனைகளா மாறி உன்னை வதைக்குது. அதைப் புரிஞ்சிக்க."

"................"

"பொண்களை அப்பப்ப கண்டிச்சு வளர்த்திருக்கணும்; ஆகாசத்துலேந்து அதிசயமா பிள்ளைங்க எனக்குத்தான் பிறந்திருக்காங்கன்ற நெனப்போட ஆரம்பத்துல



இருந்தா இன்னிக்கு இந்த அவஸ்தை பட்டுதான் ஆகணும்..."

"................"

"தம்பி ஆளவந்தார் குடும்பத்தைப் பாரு. அடக்கமா பதவிசா பிள்ளைங்களை வளர்த்தாங்க; இன்னிக்கு ஒரு மக அமெரிக்காவுலேயும், இன்னொருத்தி டெல்லிலேயும் ஊர் மெச்ச குடும்பம் நடத்தறாங்க... ஆனா, நம்ப பொண்ணுக? அடிச்சிக்க இரண்டு கை பத்தலை. தாயப் போல பிள்ளைனு எல்லாரும் முதுகு பின்னால ஏசி, சிரிக்கறாங்க. வெள்ளம் தலைக்கு மேல போனப்புறம் அப்பனா லட்சணமா கண்டிக்க, புத்தி சொல்லுங்களா இனி இது நடக்குற காரியமா? விதை ஒண்ணு போட்டா... சுரை...

அவரை முடிக்கவிடாமல் தனலட்சுமி குறுக்கே பாய்ந்தாள்.

"போனாப் போவுது சும்மா இருந்தா, தனக்குத்தான் பேசத் தெரியும்னு மேலமேல போய்க்கிட்டேயிருக்கீங்களே? எனக்குத்தான் பிள்ளைங்களை கண்டிச்சி ஒழுங்கா வளர்க்க தெரியலை... ஐயா, நா பொம்பளை... நீங்க ஆம்பளை தானே? இத்தாடி வாய மூடிடி என்னை அதட்டிட்டு நல்ல விதமா வளக்கறது! யாரு தடுத்தாங்க! உங்க தம்பி ஆளவந்தார் பொண்ணுகளை ஊர் மெச்ச வளர்த்த ரீதில நீங்களும் வளர்த்திருக்குறது தானே? மீசைக்கு குறைச்சல் இல்லே... பெரிய ஆம்பிளை கணக்கா?"

"இந்தா... சும்மா சும்மா ஆம்பிளை மீசைனு வம்புக்கு இழுத்தா எனக்கு கோவம் வரும்..."

"வந்தா? அடிச்சி புரட்டிடுவீங்களோ? பெத்த பொண்களை கண்டிக்கத் துப்பு இல்லாத நீங்களும் ஒரு அப்பன்... த்தூ..."

"நீ பெத்த பொண்ணுல உன்னை மாதிரி இல்லாம வேற எப்படி இருக்கும். சரியான சண்டி மாடுங்க... த்தூ..."

பிரச்சனைகள் முற்றிப்போய் என்ன செய்வது என்று புரியாத நிலையில் மணவாளனும் தனலட்சுமியும் ஒருவரை ஒருவர் சதா சர்வ காலம் சாட முற்பட, இதற்கெல்லாம் சிகரம் வைத்த மாதிரி சம்பவங்கள் அடுத்தடுத்து ஒரே நாளில் இந்த புதன் கிழமை நடந்தது.

கலந்து வைத்த காபி ஏடு படிந்து ஆறிப்போக, இன்னதுக்குதான் கோபம் வருவது என்று இல்லாமல் ஆகி விட்ட நிலையில் 'சனியனே! காபி குடிக்கக்கூட உனக்கு உபசாரம் பண்ணணுமா? பொழுதோட தூங்கி எழுந்துக்க முடியாதபடி அது என்ன ஜன்மம்மடீ' என்று இரைந்தபடியே உள் அறையில் எட்டிப்பார்த்த தனலட்சுமி அங்கே விஜயாவைக் காணாமல் பேபி மட்டும் அழும் பிள்ளையை சமாதானப்படுத்திக்கொண்டு இருக்க "எங்கடா அவ?" என்றாள்.

"எவ?"

"விஜி"

"எனக்குத் தெரியாது... காலைலேருந்து அவ இங்க வரலை."—

"இவன் எதுக்கு இந்த கத்தல் கத்தறான்?"

"என் தலை எழுத்து கத்தறான்; உனக்கென்ன?"—

தொடர்ந்து அங்கு நின்று மகனுடன் விவாதம் பண்ணப் பிடிக்காமல் தனலட்சுமி முன் அறைக்குச் சென்றாள்.

அங்கும் விஜயாவைக் காணோம்.

புத்தகமும் கையுமாய் இருந்த சரோஜாவிடம் "எங்கடீ விஜி?" என, "ஆமா, இந்த வீட்டுல யார் யார் எங்க இருக்காங்கனு சொல்றதைத் தவிர எனக்கு வேற வேலை இல்லை?" என்று எரிச்சலுடன் அவள் பதில் கூற



"சனியன்களா என் உயிரை வாங்க வந்த பிசாசுகளா" என்று முணுமுணுத்தபடி அவள் வாசலுக்கு வந்தாள்.

"விஜி எங்கடா?"—

"நா பார்க்கலை..."

பாத்ரூம், மொட்டை மாடியிலும் அவள் இல்லை என்பது தெரிந்தபின் தெரிந்தவர்கள் வீட்டுக்குப் போயிருப்பாளா என்று தனலட்சுமி ஒருநிமிஷம் யோசித்தாள்.

இந்த காலை வேளையிலா?

சொல்லிக்கொள்ளாமலா?

போனாலும் போவாள்... திமிர் பிடித்த கழுதை...

எரிச்சலுடன் மீண்டும் சமையல் கட்டுக்கு வந்தாள்.

காய் நறுக்கி, பருப்பு வேகவிட்டு, சமையல் செய்ய வேண்டும் என்ற நினைப்பே அலுப்பைத் தந்தது.

இந்தப் பெண்களில் ஏதாவது ஒன்றாவது கூடமாட உதவி பண்ணினால் தேவலை...

எங்கே?

எல்லாம் தடிமாடுகள் மாதிரி வளர்ந்து விட்டதே தவிரவும் ஒன்றுக்காவது அனுசரணை, பதவிசு என்பது கிடையாது.

ஆனைவத்தார் பெண்கள் எட்டு மணிக்கு வீட்டு வேலைகளைச் செய்வார்களாம்; பள்ளியில் முதலாவதாக வருவதோடு, வாயைத் திறக்காமல் காரியம் செய்வதில் படு கெட்டிக்காரிகளாம்...

ஹும்... அதற்கெல்லாம் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே?

'இருமென நாலுநாட்கள் முன் கணவர் உன் வளர்ப்பு தவறு' என்று சுட்டிக்காட்டியது நினைவுக்கு வந்து எரிச்சலை அதிகமாக்கியது.

கன் அறையில் முகுந்தன் 'வீராட் வீராட்' என்று பெரிசாய் அலறிக்கொண்டிருந்தான்.

"அப்பா...ஆ...அப்பா வேணும்..."

தெளிவாக அவன் அழுகை காதில்விழ தனலட்சுமி இருப்புக் கொள்ளாமல் எழுந்து வாசலுக்குப் போனாள்.

"இப்ப பேப்பர் படிச்சு முடிக்காட்டி உலகம் மூழ்கிப் போயிடுமா? முகுந்தன் 'அப்பா வேணும்'னு கத்தறது காதுல விழலை? போயி மாப்பிள்ளையை கெஞ்சி கூத்தாடியாவது அழைச்சிட்டு வாங்கனு நானும் பதினைஞ்சி நாளா புலம்பறேனே...என்னன்னு கேக்க மாட்டீங்களா? இனியும் என்னால தாங்க முடியாது...புறப்பட போறீங்களா இல்லியா?"

மணவாளன் பேப்பரை மடித்து வைத்தார்.

"பத்து நாள் முன்னாலகூட போனேன்; வீடு பூட்டி இருந்ததுனு சொன்னதை மறந்திட்டியா?"

"திரும்ப போங்க. மான, அவமானம் பார்த்துகிட்டு உட்கார்ந்து அனுபவிச்சது போதும். புறப்படுங்க...என்ன வார்த்தை சொல்லுவீங்களோ, எனக்குத் தெரியாது. கையோட மாப்பிள்ளையை அழைச்சிகிட்டு வந்திடுங்க... அவர் கால்ல விழுந்து மன்னிப்பு கேட்கக்கூட நா ரெடி..."

மணவாளன் புறப்பட்டுப் போனதும் தனலட்சுமி உள்ளே வந்தாள்.

ஹாஹா என்று மனசு பதறியது...என்ன செய்வேன் என்று பரபரத்தது...

பேபியை புருஷனுடன் சேர்த்து வைத்து விட்டால் பெரிய பாரம் ஒன்று குறையும்.

சரோஜாவுக்கு இப்போதைக்கு ஒரு வழியும் பண்ண முடியாது. உடம்போடு அவள் மனமும் கெட்டு விட்டது.



இரண்டையும் புரிந்து கொள்ளக் கூடிய வரனைத் தேடி ஒப்படைப்பது லேசுபட்ட காரியம் இல்லை.

வேண்டுமென்றால் இந்த விஜயாவை காலா காலத்தில் ஒருவனிடம் பிடித்துக் கொடுத்து அந்த பொறுப்பைக் குறைக்கலாம்.

வரவர அவள் சுத்தமும் கழுதையாகி விட்டாள். யாரையும் மதிப்பதில்லை. முரடனாக ஒரு பையனைத் தேர்ந்தெடுத்து அவளை வழிக்கு கொண்டுவர பண்ண வேண்டும்.

பேபி விஷயத்தில் சாது மாப்பிள்ளையாக பிடித்த மாதிரி இப்போது ஏமாந்து போகக் கூடாது.

முரடனாய், தவறை பயப்படாமல் கண்டிப்பவனாய், எதிலும் மனைவியை அடக்கும் புருஷனாய்...

நினைப்பே தனலட்சுமிக்கு இனித்தது...

நிலைமை ஒன்றும் அப்படி கட்டுமீறி போய்விடவில்லை.

இன்றைக்கெல்லாம் இருந்தால் பேபிக்கே இருபத்தி இரண்டு வயசுதான் ஆகிறது. சரோஜாவுக்கு இருபது. விஜயாவுக்கு பதினெட்டு.

இன்னும் ரொம்ப முத்திப் போகாமல், இருப்பதால் கொஞ்சம் கஷ்டப்பட்டாவது பெண்களை வழிக்கு கொண்டு வந்து விடலாம்.

புருஷனிடம் சண்டை போடுவது தவறு. அவனுக்கு மரியாதை கொடுக்காமல் நடப்பது கூடாது என்று பேபிக்கு நல்லவிதமாய் புரிய வைக்க வேண்டும். அல்லப் போது சண்டை போட்டுக் கொண்டு இங்கு வந்தால் அவளுக்காக பரிதாபப்படாமல் புருஷன் வீட்டில் உடனே கொண்டு விட்டுவிட வேண்டும்...

இப்படி தொடர்ந்து கண்டிப்பாய் இருந்தால்தானே நல்லது கெட்டது புரிந்து கொள்வாள்.

அப்புறம்...

குடும்பம் இனியாவது ஒரளவு சீர்பட, தானும், தன் பெண்களும் எப்படி மாறியாக வேண்டும் என்ற சிந்தனையில் தனலட்சுமி ஆழ்ந்திருக்கையில் மணவாளன் திரும்பி வந்தார்.

நடையில் தளர்ச்சி, முகத்தில கலவரம்.

"என்னங்க... உடனே திரும்பிட்டீங்க... மாப்பிள்ளைய பாத்தீங்களா? அவரு எங்க?"—

"............"

"என்னங்க பேசாம இருக்கீங்க?"—

"மோசம் போயிட்டோம் தனம். மாப்பிள்ளை ஏமாத்திட்டான் தனம்."

குரல் உடைந்து மணவாளன் விசும்ப தனலட்சுமி திடுக்கிட்டாள்.

"ஏ...என்னங்க?"—

"பத்து பேர் முன்னால தாலிய கழட்டிட்டு இல வந்திட்டப்புறம், மாப்பிள்ளை வெறுண்டு போயிட்டானாம். நா ஆம்பிளைன்றதை அவளுக்கு நிரூபிக்கறேன்னு சொன்னவன், போனவாரம் தன் ஆபீஸ்ல வேலை பார்க்கிற தேவகிய கோவில்ல வைச்சி தாலி கட்டிட்டானாம். இப்ப வீட்டை காலி பண்ணிட்டு டவுன் பக்கமா போயிட்டாங்களாம்...வீட்டுக்காரம்மா விவரம் சொல்லி நல்ல பிள்ளைய விட்டுட்டிங்களேனு புலம்பறாங்க தனம்...நா...நா..."

"முருகா"—



தனலட்சுமி அழக்கூடத் தெரியாமல் இரண்டு கைகளிலும் மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

உள்ளுக்குள் வண்டு ஒன்று வலிக்க வலிக்க குடைந்தது. கண்களில் பூச்சி பறந்தது.

சுதாரித்துக் கொண்டு நிமிர முயற்சிக்கையில், சரோஜா 'அம்மா......' என்று உரக்க கூவியவாறு பதட்டமாய் ஓடி வந்தாள்.

"இங்க பாரும்மா...விஜி...விஜி லெட்டர் அனுப்பி இருக்காம்மா. யாரோ ஒரு ஆள் கொண்டு கொடுத்து விட்டு போனான்."

'இந்த லெட்டரை ரயில்வே ஸ்டேஷனிலிருந்து எழுதுகிறேன். இது உங்களுக்கு வரும்போது நான் பல மைல்கள் தாண்டி போய் விடுவேன். என்னை நீங்கள் யாரும் சரியாக புரிந்துக்கொள்ளவில்லை. அதனால் என் கலை, ஆசை, திறமை எல்லாவற்றையும் நன்கு புரிந்து கொண்ட ஒருவருடன் நான் ஊரை விட்டே போகிறேன். அடுத்த வருஷம் சினிமா போஸ்டர்களில் கதாநாயகியாக என் படத்தைப் பார்த்தால்தான் என் அருமை உங்களுக்குப் புரியும். என்னைத் தேடிக் கொண்டுவர வேண்டாம்...

எந்தவித பந்தமோ, பாசமோ, உருக்கமோ இல்லாமல் எழுதப்பட்டிருந்த கடிதத்தை இரண்டாவது முறையாக படித்து நிமிர்ந்தபோது, உள் அறையில் 'அப்பா...ஆ... அப்பா வேணும்' என்று மீண்டும் பெரிசாக முருகன் அழத் துவங்க, கண்கள் இருட்டிக் கொண்டுவர, மார்பை என்னமோ வேதனைக் கொத்த, தனலட்சுமி அப்படியே மயங்கி பின்னால் சாய்ந்தாள்.

• • •

16980
3294801